# காஞ்சி மகானின் கருணை நிழலில்..!



திருச்சி தேசியக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முகா மிட்டிருந்தார் காஞ்சி மகா பெரியவர். தினமும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் அவர் அருள் வேண்டி வந்தனர். அவர்களுக்கெல்லாம் சுவையான சாப்பாடும் அளிக்கப்பட்டது.

காலையில் சுமார் பதினோரு மணிக்கு ஆரம்பிக்கும் இந்த அன்னதானம் பிற்பகல் நான்கு வரை நீடிக்கும். முண்டியடித்துக் கொண்டுவரும் கூட்டத்தைச் சமாளிப்பதும் சாப்பாடு போட்டு அனுப்புவதும் வரவேற்புக் குழுவைச் சேர்ந்த அன்பர்களுக்குச் சிரமமாக இருந்தது.

இதை மகானிடம் சொல்லி, “உணவை பொட்டல மாக கட்டி, வருபவர்களிடம் கொடுத்துவிடலாமா?” என்று கேட்டிருக்கிறார்கள்.

அவர்களைத் தன் எதிரில் அமர வைத்து அவர்களிடம் இரண்டே இரண்டு கேள்விகளை கேட்டார் காஞ்சி மகான்.

ஒன்று – சாப்பிட்ட பின் இலைகளை அவர்கள் எங்கே போடுவார்கள்?

இரண்டு – அவர்கள் தாகம் தீரக் குடிக்க ஜலத்துக்கு எங்கே போவார்கள்?

எதிரில் இருந்தவர்கள் மகா பெரியவரின் இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதில் சொல்ல முடியவில்லை.

அவர்களின் இந்த அமைதியைப் பார்த்துவிட்டு, காஞ்சி மகான், “நீங்கள் செலவையும் வேலையையும் குறைக்கத்தானே யோசிக்கிறீர்கள்? ஒருவனுக்குப் பசி இருந்தால்தானே முதல் பந்தியிலும், வேறு சிலர் கடைசிப் பந்தியிலும் சாப்பிடுகிறார்கள்?

நான் பல இடங்களுக்குச் செல்லும்போது, எச்சில் இலைகளைத் தொட்டியில் போடுவதைப் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் அந்த எச்சில் இலைகளில் மீதமாகியிருக்கும் உணவுப் பொருட்களை நரிக்குறவர்கள் சேகரித்துக் கொண்டிருப்பதையும், உணவுத் துணுக்குகளோடுகூடிய இலைகளை மாடுகள் தின்பதையும் பார்த்திருக்கிறேன். நீங்கள் இலைகளைப் போட்டு உணவு பரிமாறுவதுஎத்தனை பேருடைய பசியைப் போக்குகிறது பார்த்தீர்களா?

அதனால் ‘பொட்டலம்’ கட்டும் எண்ணத்தை இக்கணமே விட்டுவிட்டு, இலைகளைப் போட்டு எல்லோருக்கும் உணவைப் பரிமாறுங்கள். இவ்வளவு ஜனங்கள் உட்கார்ந்து சாப்பிடுவதைப் பார்ப்பதும், அதற்காகச் செலவு செய்வதும் உங்களுக்குப் பெரிய புண்ணியம்… எனக்கும் சந்தோஷம்” என்றார் மகான்.

நாம் இந்த நிகழ்ச்சியை நேரில் பார்த்திருந்தாலும் இதன் முக்கியத்துவத்தை மகான் சொல்லித்தானே தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது?

ராமன் ஒரு புகைப்படக் கலைஞர். மகா பெரியவாளைப் படமெடுக்க விரும்பித் தன்னுடைய சிறந்த காமிராவை எடுத்துக்கொண்டு காஞ்சி புரத்துக்கே வந்தார்.

தியானத்தில் இருக்கும் மகாபெரியவரைப் படம் எடுத்தால், 'ஃப்ளாஷ்' வெளிச்சம் அவரது தியானத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் என்பதால் வெகுநேரம் காத்திருந்தார்.

மகானின் தியானம் முடிந்ததும் தன் காமிராவைத் திறந்துவைத்துப் படம் எடுக்கத் தயாரானார் ராமன். அப்போது மகான் கையை உயர்த்தி ஆசீர்வதிப்பது போல காட்டிக்கொண்டு எழுந்தார். ராமன் சரமாரியாகப் படங்களை எடுத்துத் தள்ளினார்.

அவரது சிறந்த காமிராவில் இதுவரை எடுத்த படங்கள் எல்லாமே நன்றாக வந்தவை–வரக்கூடியவைதான். படங்கள் எடுத்து முடித்ததும் ராமனுக்குப் பரம திருப்தி.

அப்போது விறுவிறுவென்று வந்த மடத்து சிப்பந்தி ஒருவர் ராமனிடம், "மகா பெரியவா படமெடுக்க வேண்டாம்னு சொல்லியும் நீங்கள் ஏன் தொடர்ந்து படம் எடுத்தீர்கள்?" என்று படபடப்பாகக் கேட்டார்.

ராமனுக்கோ குழப்பம். "மகா பெரியவா ஆசீர்வாதம்தானே செய்தார்?"

"போட்டோ எடுக்காதேனு அவர் சொன்னதை நீங்கள் ஆசீர்வாதம் என்று நினைத்துக்கொண்டீர்களா? அவரை எடுத்த படங்கள் ஏதும் உங்கள் காமிராவில் விழுந்திருக்காது" என்று அந்த சிப்பந்தி சொன்னார்.

இதைக் கேட்ட ராமனுக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன மாதிரி காமிரா தெரியுமா இது? நான் எடுத்த படங்கள் எப்படி விழாமல் போகும்? அதையும் பார்த்துவிடுவோம்!" என்று தன் மனதுக்குள் அகங்காரமாக நினைத்துக்கொண்டு ஊருக்கு வந்தார். வந்ததும் முதல் வேலையாக படங்களைக் கழுவிப் பார்த்தார். மகா பெரியவரை எடுத்த ஒரு படமும் விழவில்லை!

அந்த நிமிடமே ராமனுக்கு மகா பெரியவர் சாட்சாத் சர்வேஸ்வரர் என்பது புரிந்துவிட்டது.

பின்பு, நிதானமாக ஒருமுறை காஞ்சிக்கு வந்து அன்பும் பக்தியுமாக மகானின் அனுமதி பெற்று, அவரைப் படமெடுத்துத் தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்துகொண்டார்.

ஒரு சமயம் 1959-இல் சென்னைக்கு அருகில் நசரத்பேட்டை என்னுமிடத்தில் முகாமிட்டிருந்தார் காஞ்சி மகான். பூஜைக்கு சந்தனம் அரைக்க ஆள் தேவைப்பட்டதால் ராமமூர்த்தி என்பவரை அழைத்து அரைத்துக் கொடுக்கச் சொன்னார்.

ராமமூர்த்தி, சந்தனம் அரைத்துக் கொடுத்த அன்று மாலையில் அவருக்கு இதயக் கோளாறு ஏற்பட்டது. உடனே விரைந்து சென்று ஒரு டாக்டரிடம் தன் உடலைப் பரிசோதித்துக் கொண்டார்.

பரிசோதனைக்குப் பின் டாக்டர் சொன்னார்: "உங்கள் இதயத்தில் கோளாறு இருக்கிறது. பளுவானவற்றைத் தூக்கக் கூடாது. குறிப்பாக, சந்தனம் அரைக்க வேண்டாம்!"

மகானிடம் திரும்பி வந்தார் ராமமூர்த்தி. மறுநாளும் சந்தனம் தேவைப்படவே மகான் கூப்பிட்டுச் சொன்னார்: "எல்லாவற்றையும் சந்திரமௌலீஸ்வரர் பார்த்துக்கொள்வார்... சந்தனம் அரைத்துக் கொடுப்பா."

மகானின் வாக்கைத் தட்ட முடியாமல் சந்தனம் அரைத்துக் கொடுத்தார். மீண்டும் இதயக்கோளாறு வரவே பெரியவாளிடம் டாக்டர் சொன்னதைச் சொன்னார்.

“ஹார்ட் அட்டாக் என்றால்தான் ஆபத்து. ஹார்ட் வீக் என்றால் நூறு வருடம்கூடச் சிலர் உயிரோடு இருக்கலாம். நீ வேலையைச் செய். பயப்படாதே” என் றார் மகான். அது தெய்வவாக்குதானே!

அதன்பின், மகானின் பூஜைக்குச் சந்தனம் அரைத்துக் கொடுக்கும் பாக்கியம் பல காலத்துக்குத் தொடர்ந்தது ராமமூர்த்திக்கு. அவருக்கு எந்தவிதமான இதயக் கோளாறும் அதன்பின் தலைகாட்டவே இல்லை!

காஞ்சி மகான் ஜீவிதத்தில் அநேக அற்புதங்கள் அவரின் ஞான திருஷ்டியினால் நிகழ்ந்துள்ளன. அப்படிப்பட்ட ஓர் அற்புத அனுபவம் எனக்கு ஏற்பட்டது. அதைப் பரவசத்துடன் நினைத்துப் பார்க்கிறேன்.

நான் புதுக்கோட்டை கல்லூரியில் பி.டி. படித்துக் கொண்டிருந்த காலம் அது. ஒரு நாள் நண்பர் ஒருவருடன் விராலிமலை சென்று முருகப்பெருமானைத் தரிசித்துவரப் புறப்பட்டேன்.

மலையுச்சியில் உள்ள முருகன் சந்நிதிக்குச் செல்வதற்குப் படிக்கட்டுகள் உண்டு. மலையேறி முருகனைக் கண்குளிர தரிசனம் செய்து 'முருகா, முருகா' என்ற துதியுடன் கீழிறங்கிக் கொண்டிருந்தேன்.

மலைப்பாதை வழியே திரும்பி வந்தேன். அற்புதமான இயற்கைக் காட்சிகள். பாதை நெடுக மயில்கள் கூட்டம் கூட்ட மாக மரக்கிளைகளிலும் மலைமுகடுகளிலும் அமர்ந்திருந்தன. அவை குரலெழுப்பி அகவும்போது 'முருகா முருகா' என்று கூப்பிடுவது போல இருந்தது. இதுபோல் இன்னும் பல அற்புதக் காட்சிகளை ரசித்துக்கொண்டே மலைப்பாதையில் இறங்கிக்கொண்டிருந்தேன்.

ஓரிடத்தில் மலை இடுக்கில் சின்னக் குகை ஒன்று தென்பட்டது. குகைவாயிலில் 'உள்ளே அழுக்குசாமி தவம் செய்துகொண்டு இருக்கிறார்' என்று எழுதப்பட்டிருந்தது. ஆளரவமே இல்லாத பிரதேசம் அது. என் மனதுக்குள் இனம்புரியாத ஒரு திகைப்பு. பரவசம். உள்ளே குகைக்குள் சாமியைப் போய்ப் பார்த்தால் என்ன?

ஒருமாதிரி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நுழைந்தேன்.

உள்ளே இருந்த சூழ்நிலை திகில் படத்தில் வரும் காட்சிகள் போல் இருந்தன. இருள் படர்ந்த குகை உச்சியில் பாறை இடுக்குவழியே மெல்லிய ஒளிக்கீற்று. அங்கே சாந்தசொரூபி யாக ஓர் உருவம். ஆம்! சாமியார் ஒருவர் கண்மூடி தியானத்தில் அமர்ந்திருந்தார். பார்த்த மாத்திரத்தில் அவர் வயதை என்னால் கணக்கிட முடியவில்லை. மெலிந்த சரீரம். பக்கத்தில் ஒரு தண்டம். ஒரு பெரிய வெண்சங்கம். அதனுள் விபூதி. நீண்ட வெண்தாடி. காவி நிறத்தில் ஒரு கோவணத்தை அணிந்திருந்தார்.

அவர் முகத்தில் அலாதியான ஒரு தேஜஸ். அந்த அமைதியான சூழலும் அவர் வீற்றிருந்த பாங்கும் என் மனதை ஈர்த்தது. ஆன்மாவுக்குச் சிலிர்ப்பூட்டியது.

அப்படியே தரையில் விழுந்து வணங்கி னேன். உடல் நடுங்கக் கைகூப்பி சாமி முன் நின்றேன். சில விநாடிகள் கழிந்தன.

ஆ... ஆ... கண்விழித்தது சாமி. நிமிர்ந்து பார்த்தது. ஒளிவீச்சு. பார்வையில் ஜுவாலை!

மீண்டும் விழுந்து வணங்கினேன்.

சிலிர்ப்பூட்டும் உணர்வு. ஏதோ பேச யத்தனிக்கிறேன். வாய் திறக்கிறேன். ஆனால், வார்த்தைகள் வர மறுக்கின்றன. வெறும் காற்றுதான் புஸ்புஸ்ஸென்று வந்தது.

சாமியின் தீட்சண்ணியம் என்னைப் பரவசப் படுத்தியது. "முருகனைத் தரிசிப்பதற்காக பாலமுருகன் வந்ததோ?"

"ஆ... ஆ... பாலமுருகன்... என் பெயர் பாலசுப்ரமணி யன்... சாமி... சாமி..." கண்களில் நீர் பனிக்கிறது.

என்னையுமறியாமல் இரு கை கூப்பினேன். பக்கத்தில் வைத்திருந்த வெண்சங்கத்தை எடுத்து விபூதி வழங்கியது சாமி. நான் வணங்கிக் கைகுவித்து வாங்கிக்கொண்டேன். சாமி தன் இரு கைகளையும் மேலே உயர்த்தி என்னைப் பார்த்துப் புன்னகையுடன் ஆசி கூற, மெய்சிலிர்ப்புடன் நின்றேன்.

சாமி மீண்டும் கண்மூடி தியானத்தில் ஆழ்ந்துவிட் டது. அந்தப் பரவச நிலையுடன் மலை இறங்கினேன்.

ஓராண்டு கழிந்தது.

ஆனாலும் அழுக்குசாமியின் புனித நினைவு உள்மனதில் வட்டமிட்டுக்கொண்டே இருந்தது. அந்த நேரத்தில்தான் மகா ஸ்வாமிகளைத் தரிசிக்க காஞ்சிபுரம் போனேன். ஸ்வாமிகள் ஏனாத்தூரில் முகாமிட்டிருந்தார்.

அப்பப்பா... என்ன கூட்டம்! ஆயிரக்கணக்கான அன்பர்கள்! ‘ஹர ஹர சங்கர... ஜய ஜய சங்கர’ கோஷம் வானைத் தொட்டது. பெரியவாளின் திவ்விய தரிசனத்துக்காக வரிசையில் நின்றேன். ஒவ்வொருவராக நகர்கிறார்கள்.

ஆ... ஆ... என்ன ஜ்வலிப்பு... தேஜஸ்... மகா பெரியவர் ஒரு மேடையில் அமர்ந்திருக்கிறார்.

கூட்டம் நெருக்குகிறது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிகர்கள் நாட்டின் மூலைமுடுக்கு களிலிருந்தெல்லாம் வந்திருந்து மெய்ம்மறந்த நிலையில் தரிசனத்துக்காக நிற்கிறார்கள்.

பரமாச்சாரியாருக்குப் பக்கத்தில் கைகட்டி, வாய்பொத்தி, பவ்வியமாக நிற்பது... நான் பணிபுரியும் தேதியூர் ஸ்ரீசங்கரா பள்ளியின் நிர்வாகி ஸ்ரீமான் வாஞ்சி ஐயராச்சே! அவர் மகா ஸ்வாமிகளின் அணுக்கத் தொண்டர். பெரும்பாலும் எப்போதும் ஸ்வாமிகள் சேவையிலேயே காலம் கழிப்பவர்.

வரிசையில் நான் நிற்பதைப் பார்த்துவிட்டார். கையை அசைத்து, ‘இப்படி வா’ என்று சைகை காட்டினார். கூட்டம் விலகி வழிவிட்டது. நெகிழ்வுடன் ஸ்வாமிகள் முன்னே போய் பவ்வியமாக நின்றேன்.

நிர்வாகி, ஸ்வாமிகளிடம், “இவன் எங்க ஸ்கூல்ல வாத்தியாரா இருக்கான். பாலுன்னு பேர். இவன் அப்பா கோபால சாஸ்திரிகள் பெரிய சம்ஸ்கிருத பண்டிதர். இப்ப அவர் இல்லை” என்றார் அடக்கமாக.

விழுந்து வணங்கினேன்.

மகாசுவாமிகளின் ஜோதிர்மயமான பார்வை என் மேல் படுகிறது. “அழுக்குசாமி தரிசனம் ஆச்சா?” மகா ஸ்வாமிகள் மெல்லிய குரலில் கேட்கிறார்.

ஆ... ஆ... அழுக்குசாமி! விராலிமலையில் நான் தரிசித்த அந்த மஹாபுருஷர்... ஒரு வருஷத்துக்கு முன்னே நடந்ததை ஸ்வாமிகள் இப்போது கேட்கிறாரே! சிலிர்த்துப் போகிறேன். உடம்பெல்லாம் புளகாங்கிதம். மனமெல்லாம் பரவசம். ‘அழுக்குசாமி... அழுக்குசாமி’ என்று என்னையறியாமல் முனகுகிறேன்.

“ஆச்சு... ஆச்சு... பெரியவா அருளால!”

தடுமாறிய என் பதிலைக் கேட்டு ஸ்வாமிகள் புன்னகைத்து, அடுத்த பக்தருடன் அளவளாவ ஆரம்பித்துவிட்டார்.

என்னை நெருங்கிய வாஞ்சி ஐயர், “என்னப்பா... அழுக்குசாமினு பெரியவா உன்கிட்டே ஏதோ கேக்கறார். நீயும் தடுமாறுறே?”

மீண்டும் குழறுகிறது. “மாமா... நா... நா... ஒரு வருஷம் முன்னால புதுக்கோட்டையில படிக்கறப்ப விராலி மலை போனேன். முருகன் தரிசனம் முடிச்சு வர்றப்ப அங்க ஒரு குகையில அழுக்குசாமிய தரிசனம் பண்ணினேன் மாமா... அதத்தான் இப்ப பெரியவா கேக்கறா... ஞானதிருஷ்டிதான் மாமா!” பேசமுடியாமல் திக்கித் திணறி கண்களில் நீர் கசியக் கதறுகிறேன்... நான்.

அந்த அற்புத அனுபவம் என் வாழ்நாளில் மறக்கவே முடியாதது!



மகா பெரியவர் 1981–ஆம் வருடம் பண்டரிபுரத்தில் முகாமிட்டிருந்தார். வரிசையாக பக்தர்கள் மகானை தரிசித்துக் கொண்டு வரும்போது, கூட்டத்தின் நடுவே வடநாட்டைச் சேர்ந்த சேட் ஒருவர், பெரியவாளின் முன் ஒரு டின் நிறைய நெய் கொண்டுவந்து வைத்தார்.

அதைப் பார்த்த மகான், "ஒரு ரூபாய்... ஒரு ரூபாய்..." என்று கூறினார். அங்கே கூடியிருந்த வர்களுக்கு மகான் எதற்காக அப்படிக் கூறுகிறார் என்று தெரியவில்லை. அவர் நிஜமாகவே ஒரு ரூபாய் கேட்பதாக நினைத்துக்கொண்டு, அங்கிருந்தவர்கள் ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் பணத்தை எடுத்தனர்.

மகான், தன் அருகில் இருந்த மடத்துச் சிப்பந்தியிடம் சொன்னார்: "அந்த சேட்டிடம் ஒரு ரூபாய்க்குத்தானே நெய் வாங்கி வரச் சொன்னேன்... ஏன், ஒரு டின் நெய் வாங்கி வந்தார் என்று கேள்!"

எல்லோரும் இதைக் கேட்டு வியந்து போனார்கள்.

'பெரியவா எப்போது இந்த சேட்டிடம் ஒரு ரூபாய்க்கு நெய் வாங்கிவரச் சொல்லி இருக்கக் கூடும்?' என்று விளங்காமல் விழித்தனர்.

இதைப் புரிந்துகொண்ட சேட், நிதானமாக பதில் சொன்னார்:

"என் மகளை யாரோ கடத்திக்கொண்டு போய்விட்டார்கள். நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது, 'ஸ்வாமிஜி' என் கனவில் தோன்றி, 'ஒரு ரூபாய்க்கு நெய் வாங்கிக் கொண்டு பண்டரிபுரத்துக்கு வா. உன் மகள் சேதமின்றி வீடு திரும்புவாள்' என்று கூறினார். சொன்னபடியே, மறுநாள் என் பெண் பத்திரமாக வீட்டுக்குத் திரும்பிவிட்டாள். அதான் பெரியவா சொன்ன ஒரு ரூபாய் நெய்க்கு பதிலாக ஒரு டின் நெய் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன்!" என்று அவர் சொன்னதைக் கேட்ட பக்தர்கள் அனைவரும் வியப்பு அடைந்தனர்.

சேட்டுக்குக் கனவில் தோன்றி, தான் சொன்னது வாஸ்தவம்தான் என்கிற உண்மையை அந்த மகான் எல்லோருக்கும் புரியவைத்துவிட்டார் அல்லவா?

சர்வ வல்லமை படைத்த அந்த மகான் சகலத்தையும் அறிந்து, உதவவேண்டிய பக்தர்களுக்கு அவ்வப்போது தவறாமல் உதவி வருகிறார்!

உலகுக்கு அனுக்கிரகம் செய்யும் அந்த மாபெரும் தெய்வத்தின் உயரிய நிலையைப் பற்றி, கருப்பத்தூர் சந்திரசேகர கனபாடிகள் சொல்லும் சம்பவம், நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

காளஹஸ்தியில் மகான் முகாமிட்டிருந்தபோது மகானின் முன்னிலையில் நடந்த சதஸ் ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றார் கனபாடிகள். மகானை தரிசித்த கனபாடிகள், மடத்தினுள்ளே வலம்வந்து கொண்டிருந்தார்.

ஆங்காங்கே எரியும் எண்ணெய் விளக்குகளின் மங்கலான வெளிச்சம். திடீரெனக் கை தட்டும் ஓசை கேட்டது. சத்தம் வந்த திசைப்பக்கம் கனபாடிகள் திரும்பிப் பார்த்தார். மையிருட்டில் அவர் கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. அதனால், அவர் தன் நடையைத் தொடர்ந்தார்.

மீண்டும் கைதட்டல் ஓசை! சத்தம் வந்த பக்கம் கனபாடிகள் நடந்துபோனபோது, அங்கே மகான் ஒரு தூணின் மறைவில் அமர்ந்திருந்தார்.

"இங்கே வா!" என்று கனபாடிகளை அழைத்தார். அதற்குப் பிறகு அவர்கள் இருவருக்கும் நடந்த சம்பாஷணை இங்கு.

**மகான்:** சிலருக்கு உடம்பில் சில இடங்களில் அடித்தாலோ, கிள்ளினாலோ, சொரணை இருக்காது. மரத்துப் போயிருக்கும் என்பார்கள். அதை நீ கேள்விப்பட்டிருக்கியோ?

**கனபாடிகள்:** கேள்விப்பட்டிருக்கேன். பெரியவா சொன்னது வாஸ்தவம்தான்!

**மகான்:** சிலருக்குச் சில சமயம் நாக்கு ருசிக்காது. சிலர் பிறவியிலேயோ, நாளடைவிலோ கேட்கும் சக்தியை இழந்திருப்பார்கள்.

**கனபாடிகள்:** கேள்விப்பட்டிருக்கிறேன்!

**மகான்:** சிலருக்கு ஜலதோஷம் பிடித்தால், மூக்கு நுகராது... பிறகு சரியாகிவிடும்!

**கனபாடிகள்:** ஆமாம்! கவனித்திருக் கிறேன்.

**மகான்:** என்னை நீ அடிக்கடி கவனிச்சிருக்கியோ? அப்படிக் கவனிச்சு இருந்தா ஒரு விஷயம் உனக்கு நன்னா புரிஞ்சிருக்கும். என்னைப் பார்க்க வருபவர்கள் எனக்கு விதவிதமான மாலைகளை அணிவிக்கிறார்கள். அந்த மாலைகளில் இருந்து வாசனையுள்ள சில புஷ்பங்களை எடுத்து நான் நுகர்வதைப் பார்த்திருக்கியோ?

**கனபாடிகள்:** அடிக்கடி அப்படிப் பார்த்திருக்கிறேனே!

**மகான்:** ஆனால், எனக்கு எந்த வாசனையும் தெரியாது என்பதுதான் நிஜம். சுமார் நாற்பது வருஷமா இதே நிலைதான் நீடிக்கிறது. சரி, துர்நாற்றமாவது தெரிகிறதா? என்றால், அதுவும் இல்லை. அதையும் ஒருமாதிரி பரீட்சித்துப் பார்த்து விட்டேன். மூக்கைப் பொத்திக் கொள்ளும்படியான எந்த ஒரு சூழலும் இதுவரை எனக்கு ஏற்பட்டதில்லை. எனக்கு இப்படி என்றால் என்னைத் தரிசிக்க வருபவர்கள் நிலைமை வேறுமாதிரி இருக்கிறது. என் அருகே வருபவர்கள் மூக்கைக் கையாலும் துணியாலும் பொத்திக்கொண்டு திணறு வார்களே... பார்த்திருக்கிறாயா? (பெரும் சிரிப்பு) அதாவது, எனக்கு எந்தத் துர்நாற்ற மும் தெரியாது... வாசனையும் தெரியாது! நான் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவன்...

—இப்படி மகா ஸ்வாமிகள் வெளிப்படையாகச் சொன்னதைக் கேட்ட கனபாடிகள் பிரமித்து நின்றார். சகல போகங்களையும் தன்னுள் அடக்கிய பெருந்தெய்வம் உலகுக்கு அப்பாற்பட்டவராக எளிமையாகத் தன்னைக் காட்டிக்கொண்டு, உலகுக்கு அனுக்கிரகம் செய்து கொண்டிருக்கும் கருணையைச் சொல்லிச் சொல்லி மனம் கசிந்துருகுகிறார் கருப்பத்தூர் சந்திரசேகர கனபாடிகள்.

## சேவையில் ஈடுபடுங்கள்!

பிறருக்கு உபகாரம் செய்வதற்கே நமது சரீரம் ஏற்பட்டிருக்கிறது என்பது ஆன்றோர் மொழி. தேகத்தில் நல்ல தெம்பு இருக்கிறபோதே, இளைஞர்கள் சேவை நெறியில் ஈடுபடவேண்டும். பிறருக்குச் சேவை செய்வதற்காகவே தேகபலத்தை நன்கு காத்துக்கொள்ள வேண்டும். தேக பலத்தைவிட ஒழுக்கம் முக்கியம். நாம் தூய்மையாக இருந்தால்தான் பிறருக்கு நல்ல முறையில் சேவை செய்ய முடியும்.

சமூகசேவை உண்மையானதாக இருக்க வேண்டுமானால், சேவை செய்கிறவர்களுக்கு தர்மத்திலும் சத்தியத்திலும் தளராத பிடிப்பு இருக்கவேணடும். அவர்களுக்கு பயம் என்பதே கூடாது. இளைஞர்களுக்கெல்லாம் உதாரணமாக இருப்பவர் ஆஞ்சநேய ஸ்வாமி. சுபாவத்திலோ சாந்தராக இருந்தார். கோபித்து எழவேண்டிய சமயத்தில் மஹாவீரராகப் புறப்படுவார். அவருடைய புத்திபலம் பெரிது. ஆயினும் பக்தியில் தோய்ந்து அடக்கத்துடன் சாந்தமே ஸ்வரூபமாகச் சேவை செய்து கொண்டிருந்தார்.

எல்லாம்வல்ல பரமேஸ்வரனான மகா பெரியவர் கும்பகோணம் ஸ்ரீகாஞ்சிமடத்தில் முகாமிட்டிருந்தார். அங்கு வெகு விமரிசை யாக வியாசபூஜை நடந்துகொண்டிருந்தது. ஸ்ரீசந்திரமௌலீஸ்வரர் பூஜை முடிந்து, எல்லா பக்தர்களும் மகா பெரியவரைத் தரிசனம் செய்ய முட்டி மோதிக்கொண்டிருந்தனர். அவரின் திருக்கரங்களால் அபிஷேகத் தீர்த்தம் வழங்கிக் கொண்டிருந்தார். வரிசையில் பக்தர்கள் வர, அதில் ஒரு பக்தரின் முறை வந்தது. பிரசாதம் தரும்போது மகான் அவரை நிமிர்ந்து பார்க்கிறார்.



பிறகு அவரிடம், “நாளை நீ வேத பாராயணத்துக்குச் சீக்கிரம் வந்துடு” என்று சொன்னார். மகானின் உத்தரவுக்கு மறுப்பேது?

அவரும் மறுநாள் காலையில் மகான் இட்ட கட்டளைப்படியே வேத விற்பன்னர்களின் அந்தப் பாராயண நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். பாராயணம் நடந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில் மகாபெரியவர் திடீர் விஜயம் செய்தார். வழக்கமாக இப்படி அவர் வருவதில்லை.

முதல் நாள் தன்னிடம் அனுக்கிரகம் பெற்ற குறிப்பிட்ட அந்த பக்தர் மனமுருகிப் பாராயணம் செய்வதைக் கவனித்தார். வேத மந்திரங்களைச் சொல்லும்போது அந்த பக்தருக்கு மட்டும் அவ்வப்போது மூச்சடைத்தது. சற்றுத் தடுமாறியவாறே கஷ்டத்துடன் ஸ்லோகங்களைச் சொல்லி வந்தார் அவர். அவருக்குத் தொண்டையிலோ அல்லது சுவாசப் பையிலோ ஏதோ கோளாறு இருக்கிறது என்பதை காஞ்சி மகான் உணர்ந்தார்.

வேத பாராயணம் முடிந்து எல்லோருக்கும் பிரசாதம் வழங்கும் நேரத்தில் மேற்படி பக்தரை மட்டும் தனிப்பட்ட முறையில் கூப்பிட்டுக் கொஞ்சம் காத்திருக்கச் சொன்னார்.

பக்தருக்கு மனதில் கவலை. ‘தனது பாராயணத்தில் மகான் ஏதோ குறை கண்டுபிடித்திருக்கிறார். அதை சுட்டிக்காட்டிக் கண்டிக்கத்தான் இருக்கச் சொல்லியிருக்கிறார்’ என்று சஞ்சலத்துடனே காணப்பட்டார்.

சிறிது நேரத்தில் அங்கே ஒரு வைத்தியர் வந்தார். மகானின் உத்தரவுப்படி, அந்த பக்தரை வைத்தியர் நன்றாகப் பரிசோதித்தார். பிறகு அவரைத் தனது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பல சோதனைகளை நடத்தியபின், அந்த பக்தருக்கு இதய நோய் இருப்பது தெரிய வந்தது. அதனால்தான் பாராயணத்தின்போது மூச்சுத்திணறல்!



மகா பெரியவரின் கட்டளைப்படி, பக்தருக்கு நல்ல வைத்தியம் செய்யப்பட்டு அறுவை சிகிச்சையில்லாமல் குணப்படுத்தினார் வைத்தியர். ஏறக்குறைய பத்து தினங்களுக்குப் பிறகு அந்த பக்தர் மீண்டும் மகானைப் பார்க்க வந்தார். "இப்போது நீ கொஞ்ச நேரம் வேதபாராயணம் செய்" என்று அவருக்குக் கட்டளையிட்டார் மகான். எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் வேதபாராயணம் செய்தார் அவர். வரவிருந்த பெரும் தீங்கிலிருந்து மகா பெரியவர் அந்த பக்தரைக் காப்பாற்றி அருளினார். இதைப் பற்றி அந்த பக்தர் என்ன சொன்னார் தெரியுமா? "தேவாரத்தில் குறிப்பிட்டபடி நமக்கு வரும் தீங்குகளும், கஷ்டங்களும், நாம் தீவிரமாக பக்தியுடன் பகவானைப் பிரார்த்தனை செய்யும்போது தானாக விலகி விடுகிறது."

காஞ்சி மகானின் சேவையில் ஈடுபட்டிருந்தவர்களில் ஸ்ரீகண்டன் மிகவும் முக்கியமானவர். 'மகானைத் தவிர வேறு உலகமே இல்லை' என்று நினைப்பவர் அவர்.

ஒரு சமயம் மகான் மடத்தில் இல்லை. சற்று தொலைவில் ஓரிடத்தில் இருந்தார். அந்த இடம் என்னவென்று சரியாக ஞாபகம் வரவில்லை. அப்போது ஒரு நாள் மாலைப் பொழுது... ஸ்ரீகண்டன் பக்தி சிரத்தையோடு ஒரு பக்கம் அமர்ந்து உரலில் மாவாட்டிக் கொண்டிருந்தார்.

கைகள் வேலை செய்து கொண்டிருந் தனவே தவிர, மனம் பூராவும் மகானின் நினைவாகவே இருந்தது. அந்தச் சமயம் மடத்து ஊழியர் ஒருவர் மிகவும் வேகமாக அவரிடம் வந்தார்.

"'என்ன வேலை செய்து கொண்டிருந் தாலும், அதை அப்படியே விட்டுவிட்டு உடனே வரவேண்டும்' என்று உத்தரவாகி இருக்கிறது!" என்றார் அவசரக் குரலில்.

'மகான் இப்படியொரு உத்தரவை ஏன் போட்டார்?' என்று ஸ்ரீகண்டன் கேட்கவில்லை. மகானின் சந்நிதிக்குப் பரபரப்பாக ஓடிவந்தார். ஸ்ரீகண்டன் அங்கிருந்து புறப்பட்டதுதான் தாமதம்... அவர் அமர்ந்திருந்த இடம், அப்படியே இடிந்து விழுந்தது. அவர் மட்டும் எழுந்து வராதிருந்தால், இடிபாடு களுக்கிடையில் அவர் சிக்கியிருப்பார்.

தீர்க்கதரிசியான காஞ்சி மகானின் கருணை உள்ளத்தினால் அவர் அன்று உயிர் பிழைத்தார். 'இது உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று அந்த சர்வேஸ் வரனிடம் கேட்க முடியுமா? ஸ்ரீகண்டன் வழக்கம்போல் கண்களில் நீர்மல்கச் சாஷ்டாங்கமாக விழுந்து, அந்தத் தெய்வத்தை வணங்கினார்.

**கா**ஞ்சி மாமுனிவர் பற்றையும் பாசத்தையும் முற்றும் துறந்தவர். ஆனால், தாம் ஏற்றுக்கொண்ட கடமையைத் தவறாமல் நிறைவேற்றுவதில் எவ்வளவு தீவிரமாக இருந்தார் என்பதற்கு இதோ ஒரு சான்று –



ஒரு நாள்... உச்சிவேளைப் பொழுது. மகா பெரியவர் ஏதோ ஓரிடத்தில் முகாமிட்டிருந்தார். சுட்டெரிக்கும் அந்த வெயில் நேரத்தில் மகான் மட்டும் கையில் தண்டத்தை எடுத்துக்கொண்டு மிகவும் வேகமாகக் கிளம்பிவிட்டார். அவர் பின்னால் வேறு யாருமே கிளம்பவில்லை. மகான் இப்படித் திடுதிப்பெனக் கிளம்புவார் என்று அவர்களுக்குத் தெரியுமா... என்ன?

மகாபெரியவர் எங்கோ புறப்படுகிறார் என்பதைத் தாமதமாக அறிந்த மடத்துச் சிப்பந்திகள் வேகமாகப் பின்னால் ஓடி, மகானுடன் சேர்ந்துகொண்டார்கள். ஸ்வாமிகளுக்குக் குடை பிடித்துக்கொண்டே ஒருவர் ஓடிக் கொண்டிருந்தார். ஏனெனில், பெரியவாளின் வேகம் அப்படிப்பட்டது! அவரது நடையே ஓட்டமாகத்தான் இருக்கும்.

அவர் எங்கே சென்று கொண்டிருக்கிறார் என்று முதலில் யாருக்கும் தெரியவில்லை. பிறகுதான் தெரியவந்தது – மகாபெரியவர், ஓர் அன்பரின் வீட்டுக்கு நண்பகல் சரியாக 12 மணிக்கு ‘பிட்சை’க்கு வருவதாக வாக்களித்திருந்தார் என்று! பூஜைகள் எல்லாம் முடியவே மணி 11.30 ஆகிவிட்டது. அதைத் தொடர்ந்து பக்தர்கள் கூட்டம் வேறு மொய்த்துவிட்டது. இந்தக் களேபரத்தில் மணி 11.50 ஆகிவிட்டது. தன் பக்தர் ஒருவர் தனக்காகக் காத்துக்கொண்டிருப்பாரே என்கிற எண்ணம்தான் மகானின் மனதில்.

அந்தக் குறுகிய கால அவகாசத்தில் மடத்து ஊழியர்களிடம் சொல்லிக்கொண்டு புறப்படுவது என்பது அவ்வளவு சுலபமா என்ன? அதனால்தான் திடீரென அந்த பக்தரின் வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டார் மகான். சுப்ரமணிய ஐயர், போளூர் போஸ்ட்மாஸ்டர்! நேர்மையான, சத்தியம் தவறாத வாழ்க்கை வாழ்ந்தவர். காஞ்சி மகானின் பரம பக்தர். இவருக்கு அனுக்கிரகம் புரிவதற்கோ என்னவோ, மகான் கலசபாக்கம் என்னும் ஊரில் முகாமிட்டிருந்தார். மகானைத் தரிசிக்க சுப்ரமணியனும் கலசபாக்கம் வந்திருந்தார். இவர் வந்த நேரம் ஈஸ்வரன் கோயில் தரிசனத்துக்காகப் புறப்பட்டுவிட்டார் மகாபெரியவர்.

தயங்கி நிற்காமல் மகான் சென்ற வழியில் வேகமாக நடந்தார் சுப்ரமணியன். சற்று முன்னால்தான் மகான் தன் பரிவாரங்களுடன் போய்க்கொண்டிருந்தார். சுப்ரமணியன் பின்தொடர்ந்து செல்லும்போது, அவர் கண்களில் மகானின் திருவடிகளைப் பாதுகாக்கும் பாதரட்சைதான் தெரிந்தது. வாழும் அந்தத் தெய்வத்தின் புனிதப் பாதரட்சைகளைத் தன் கைகள் ஸ்பரிசிக்கும் பாக்கியம் கிட்டினால் எப்படி இருக்கும் என்ற ஓர் எண்ணம் சுப்ரமணியனின் மனதில் ஓடியதோ என்னவோ... அதை ஒட்டியே மகானின் திருவிளையாடல், அங்கேயே அப்போதே அரங்கேறியது.

கோயிலுக்குள் நுழையும்போது மகான் தன் பாதரட்சைகளை எங்கே விட்டுச் செல்வாரோ என்கிற கவலை சுப்ரமணியனின் மனதில்! மகானுடன் கோயிலுக்குள் சென்று ஈஸ்வர தரிசன பாக்கியம்கூட அவருக்கு சிலாக்கியமானதாகத் தெரியவில்லை.

மகான் அப்போது கேட்டார்: “நான் கோயிலுக்குள் போய்ட்டு வர்றவரைக்கும் என் பாதரட்சையை யாராவது வெச்சுண்டு இருப்பாளா?”

தங்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்குமோ என்று சுற்றியிருந்தவர்கள் ஆவலுடன் மகாபெரியவரையே பார்த்தவாறு இருந்தனர்.

மகான் சொன்னார்: “சிகை (குடுமி) வச்சிருக்கிறவா யாராவது இங்கே இருந்தா அவர் இந்த பாதரட்சைகளை வெச்சுக்கலாம்.”

அந்த நேரத்தில் அங்கே சிகை வைத்திருந்த வெகு சிலரில் போஸ்ட்மாஸ்டர் சுப்ரமணிய ஐயரும் ஒருவர்! அவருக்குத்தான் அந்த யோகமும் வாய்த்தது. பரவசத்தோடும் உள்ளத்தில் ஊற்றெடுத்த பக்தியோடும் அந்தப் பணியை மேற்கொண்டார் சுப்ரமணியன்.

மகான் தன் பரிவாரங்களுடன் கோயிலுக்குள் போய்விட, இவர் மட்டும் வெளியே பாதரட்சைகளோடு!

அந்த நேரத்தில் சுப்ரமணியன் மனதில் புதிதாக ஓர் ஏக்கம் – ‘இதுவும் பரமானந்தம்தான்! இருந்தாலும் மகா பெரியவாளுடன் கோயிலுக்குள் சென்று ஈஸ்வர தரிசனம் செய்ய முடியாமல் போய்விட்டதே!’

உள்ளே இருக்கும் மகானுக்குத் தன் பக்தனின் உள்ளம் புரியாதா? கோயில் கைங்கரியம் செய்யும் சிகைவைத்த ஓர் அன்பரிடம் மகான் கட்டளை இட்டார். “வெளியே பாதுகையை வெச்சிண்டு ஒருத்தர் நின்னுண்டு இருப்பார். அவர்கிட்டே அதை வாங்கிண்டு, அவரை உள்ளே அனுப்பு... அங்கே இருக்கிறவர் இங்கே வந்தப்புறம் அம்பாள் சந்நிதியில் தீபாராதனை பண்ணலாம்.”

அவர் கட்டளைப்படி எல்லாமே நடந்தன. அந்த எளிய பக்தருக்காக அம்பாள் தீபாராதனையை நிறுத்திய மகான், பக்தர் உள்ளே வந்தவுடன் அம்பாள் தரிசனமும் தன் தரிசனமும் ஒரே சமயம் கிடைத்திட மாபெரும் அருளைப் பொழிந்து, சுப்ரமணிய ஐயரை பெரும்பாக்கியம் அடையச் செய்தார்.

## மழை எப்படி வருகிறது?

“தேவலோகத்தில் வயல் கிடையாது. தேவர்களுக்குச் சாப்பாட்டுக்கு வழி இல்லை! துர்பிக்ஷம் தேவலோகேஷு மநூநாம் உதகம் க்ருஹே என்று வேதத்திலேயே சொல்லியிருக்கிறது. மேல்மட்டத்தில் இருக்கிற மேகங்கள், மழையாக பூமியில் பெய்து, பூலோகத்தில்தான் ஜலம் ஆறு, ஏரி, கிணறு என்று எடுத்துப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளும்படி இருக்கிறது. உதகம் (ஜலம்) நம் லோகத்து மனுஷ்யனின் கிருஹத்தில்தான் உண்டு. ஜலத்தைக் கொண்டு பயிர் பண்ணி சுபிட்சம் அடைவது பூலோகத்தில்தான். வயல் இல்லாத தேவலோகத்தில் துர்பிக்ஷம்தான். இப்படி அந்த வேதவாக்கியம் சொல்கிறது. ஆனால், மேலேயிருக்கிற மேகம் நமக்கு ஜலமாக வரவேண்டுமானால், அது தேவர்களின் அனுக்கிரகத்தாலேயே நடக்கும். நாம் யக்ஞம் செய்தால்தான் அவர்கள் அந்த அனுக்கிரகத்தைப் பண்ணுவார்கள். இல்லாவிட்டால் மழை பெய்யாது. பஞ்சம்தான் வரும். பூமியில் பெய்யாமல் சமுத்திரத்திலேயே எல்லா மழையும் பெய்துவிடும். அல்லது பயிரெல்லாம் அழுகி அடித்துக்கொண்டு போகும்படி பேய்மழையாகப் பெய்யும். ஒன்று – அளவுக்கு மீறிப் பெய்து வெள்ளத்தில் பயிர் நாசமாவது. இன்னொன்று – மழையே பெய்யாமல் பஞ்சம் ஏற்படுவது. இந்த இரண்டும் ஏற்படாமல், சுபிட்சத்துக்கு உரிய மழையை அளவாக அனுப்பி வைக்கிற சக்தி தேவலோகவாசிகளுக்கு மட்டுமே இருக்கிறது.

**ரா**மகிருஷ்ண மடத்தில் தன்னார்வ ஊழியராகப் பணிபுரியும் அந்த இளைஞர், ஒரு கடையில் வேலை செய்து சொற்ப சம்பளம் பெற்று வந்தார்.



அவர் ஒரு பிரம்மச்சாரி. அவர் மனதில் அப்படிப்பட்ட பக்தி! சத்தம் போட்டுப் பேசியறியாதவர். பக்தியைத் தவிர வேறு ஏதும் அவருக்குத் தெரியாது. மடத்தின் துறவிகள் அவருக்குக் கொடுத்த மரியாதை, அவரது நடத்தைக்குக் கொடுத்த நற்சாட்சிப் பத்திரம்.

அந்த இளைஞர் ஒருதடவை காஞ்சி மகானை தரிசிக்க காஞ்சி மடத்துக்குச் சென்றார். அதிகமான கூட்டம். பக்தர்கள் வரிசையாக நின்றுகொண்டிருந்தார்கள். இளைஞரும் அந்த வரிசையில் நின்றார்.

மகான் உட்புறத்தில் பக்தர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருந்தார். வரிசைப்படி அந்த இளைஞர் மகானின் முன் பவ்யமாக நின்றார்.

திடீரென மகானிடம் ஒரு மாறுதல்...தன் இருக்கையைவிட்டு எழுந்து வெளியே வந்தவர், எதிரே நின்றுகொண்டிருந்த அந்த இளைஞனின் கையைப் பிடித்துத் தன்னுடன் அழைத்துப் போனார்.

மடத்துச் சம்பிரதாயம் காரணமாக சுவாமிகள் யாரையும் தொடுவதில்லை. ஆசாரமான அந்தணர்கள் மட்டும் நெருக்கமாக இருந்து கைங்கரியம் செய்ய முடியும். எனவே, எல்லோருக்கும் அதிர்ச்சி.

சுற்றிலும் நின்றிருந்த பக்தர்களின் முகத்தில் தெரிந்த குழப்பத்தைப் பார்த்த மகா பெரியவர், ‘இவன் மிக உயர்ந்தவன்!’ என்பது மாதிரி சைகையால் சொல்லி, அந்த வாலிபரைத் தன் அருகே அமர்த்திக் கொண்டார். தனக்குப் போடப்பட்ட ஒரு மாலையை அவருக்கு அணிவித்து, தலையில் மலர்க்கிரீடமும் வைத்து அழகுபார்த்தார். பிறகு அந்த இளைஞரை ஆசீர்வதித்து, பிரசாதம் கொடுத்து அனுப்பினார். இதற்கு என்ன காரணம்?

பிரம்மஞானிகள், உள்ளத்தைத்தான் ஊடுருவிப் பார்க்கிறார்கள். இளைஞனின் உள்ளம் எப்படிப்பட்டது என்பதை மகான் அறிந்திருக்கிறார் என்பதற்கு இதுவே சாட்சி.

பல வருடங்களுக்குப் பிறகு, ஒவ்வொரு அமாவாசை தினத்தன்றும், காசியில் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் பொறுப்பை பக்திச் சிரத்தையுடன் ஏற்று நடத்தி வந்தார் அந்த இளைஞர். மேலும் கயிலாய யாத்திரைக்குக் குறைந்த அளவில் தொகையைப் பெற்று, பக்தர்களை அழைத்துப் போகும் பெரும்பேற்றையும் பெற்றிருக்கிறார் இவர்.

அவர் இன்னமும் பிரம்மச்சாரிதான். ராமகிருஷ்ண மடத்தின் தன்னார்வ ஊழியர்தான்!

மகா பெரியவா முன், ஒருநாள் காலையில் கண்ணீருடன் இளைஞன் ஒருவன், கைகூப்பி வணங்கியபடி நின்று கொண்டிருந்தான். பெரியவா அவனைக் கரிசனத்துடன் விசாரித்தார். இப்படி அவர் கேட்டது, அவன் அழுகையை மேலும் அதிகமாக்கியது.

சற்றுப் பொறுத்து, மெதுவாக அவன் தன்னைப் பற்றிச் சொன்னான். “படிப்பு முடிந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியும், எனக்கு எந்த வேலையும் கிடைக்கலே... வீட்டில் உள்ளவர்களின் ஏச்சுபேச்சுக்களைத் தாங்கவே முடியலை. என் அப்பா எப்ப பார்த்தாலும் என்னை ‘தண்டம், தண்டம்’னு குத்திக்காட்டிட்டு இருக்கார். மனசுக்கு ரொம்ப வேதனையா இருக்கு. அதான் பெரியவாகிட்ட சொல்லி அழுது, ஆறுதல் பெறலாம்னு இங்கே வந்தேன்” என்று கரகரப்பான

குரலில் சொன்னான். கருணையோடு அவனைப் பார்த்த மகான், ஒரு பக்கமாக உட்காரச் சொன்னார். காரணம் அவர் அன்றைய அனுஷ்டானங்களை முடிக்க வேண்டியிருந்தது.

தொடர்ந்து தனது செங்கோலாகவே திகழும் ‘தண்டம்’ என்று எல்லோராலும் அழைக்கப்படும் செங்கோலுடன் பக்தர்களுக்குக் காட்சியளித்த வண்ணம் அமர்ந்திருந்தார்.

அப்போது அரசாங்கத்தின் உயர் பொறுப்பில் இருந்த இன்ஜினீயர் ஒருவர், மகானை தரிசிப்பதற்காக வந்திருந்தார். அவரைப் பார்த்த மகான் புன்னகைத்தார். வந்திருந்த இன்ஜினீயருக்கோ மனம்நிறைந்த உற்சாகம். பிறகு, தன் கையிலிருந்த துறவறத் திருக்கோலை அவரிடம் காட்டி, “இதுக்குப் பேர் என்ன?” என்று கேட்டார்.

அந்த இன்ஜினீயர், “தண்டம்!” என்றார் பணிவாக.

“இதுக்கு உன்னாலே ஒரு வேலை போட்டுத் தரமுடியுமா?” என்று கேட்டார்.

“பெரியவா சொல்றது எனக்குப் புரியலியே!”

மகான், தன் அருகில் சற்று எட்ட இருந்த அந்த இளைஞனை அழைத்து, “இவனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுப்பியா..? ஏன்னா, இவன் வீட்லே எல்லாரும் இவனை ‘தண்டம்... தண்டம்’னே கூப்பிடறாளாம்!”

ஒரு சாதாரண இளைஞனுக்காக மகான் இப்படித் தன்னிடம் கேட்பது, அந்த அதிகாரியை ரொம்ப நெகிழ்ச்சியுற வைத்தது.

“பெரியவா உத்தரவு போட்டா போதாதா? நான் அதுக்காகத்தானே காத்துட்டிருக்கேன்” என்றார் இன்ஜினீயர்.

“ஒரு தண்டத்துக்கு வேலை கிடைச்சாச்சு... அதனாலே இன்னொரு தண்டத்துக்கு வேலை முடிஞ்சிடுத்து!” என்று தன் கையில் இருந்த தண்டத்தை அருகிலுள்ள சுவரில் சாத்தினார். தொடர்ந்து மகான், அங்கே கூடியிருந்த தன் பக்தர்களிடம் சொன்ன வாசகங்கள் இவை....

“தண்டம் தண்டம்னு கரிச்சுக் கொட்டறாளே... அதுதான் எங்களுக்கு ரட்சை. பிரம்மச்சாரிகளுக்கும் ரட்சை. ராஜதண்டத்துக்கு அடங்கித்தான் லோகத்திலே நீதி நியாயங்கள் இருந்தது. ஈஸ்வர சிருஷ்டியிலே எதுவுமே உபயோக மானதுதான். தண்டமில்லே!” என்றார்.

## காஞ்சி மகானின் கருணை நிழலில்..!



ஒரு நாள் மாலைநேரம். மகா பெரியவர் தரிசனம் கொடுத்துக் கொண்டிருக்கும்போது வயதான ஒரு தம்பதி, அவர் எதிரில் வந்து வணங்கி நின்றனர். இருவரும் புத்தாடை அணிந்திருந்தனர்.

அவர்களைப் பார்த்தவுடன், "எல்லாம் நல்லபடியாக முடிந்ததா?" என்று மகான் அன்போடு வினவ, உடனே தம்பதி சாஷ்டாங்கமாக பெரியவா காலில் விழுந்து வணங்கினர். பெண்மணி தன் கண்களில் வழிந்த நீரைத் துடைத்து விட்டுக்கொண்டார். அது ஆனந்தக் கண்ணீராகத்தான் இருக்கவேண்டும். அவர்களை எதிரே அமரச் சொல்லிவிட்டு, மகான் அவர்களிடம் பேசிக்கொண்டே இருந்தார். ஆனால், அவர் கையோ சுற்றிலும் இருந்த பூக்களை மாலைகளாக இணைப்பதைச் சிலர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

முழுமையாக இரண்டு மாலைகள் தயாராகிவிட்டன. தம்பதியை அழைத்தார். தான் தொடுத்த மாலைகளைக் கொடுத்து, ஒருவர் கழுத்தில் மற்றவரை அணிவிக்கச் செய்தார். இந்த நேரத்தில் பெரியவா சொன்னதன் பேரில், அருகிலிருந்த வேதவிற்பன்னர்கள் மந்திரங்களைச் சொன்னார்கள். மூதாட்டி கண்களில் நீர் மல்க, "சர்வேஸ்வரா... சர்வேஸ்வரா!" என்று உச்சரித்தவாறு கைகளைக் கூப்பியபடி நின்றார். மகா பெரியவர் மனதார அவர்களை ஆசீர்வதித்து விடை கொடுத்தார்.

'யார் இந்த தம்பதி? பெரியவர் தன் பொற்கரங்களால் இவர்களுக்கு மாலை தொடுத்துத் தரவேண்டிய அவசியம் என்ன?' – அருகில் இருந்த ஓர் அன்பருக்குள் கேள்விகள் எழுந்தன. அந்தத் தம்பதியை நெருங்கி மெதுவாக விசாரித்தார். இதுதான் விஷயம்:

அவர்கள் பெங்களூரைச் சேர்ந்தவர்கள். அன்று காலையில்தான் அவர்கள் இருவருக்கும் சென்னையில் அவர் மகன் வீட்டில் 'பீமரதசாந்தி' (எழுபது வயது) விமரிசையாக நடந்து முடிந்தது. பிற்பகலில் அவர்கள் பெங்களூருக்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

செல்லும் வழியில் மகனிடம், தாய் சொல்கிறார்: "பெங்களூர் போகும் வழியில் குருநாதர் காஞ்சி மகானை தரிசிக்க எனக்கு ஆசை!"

"இன்று முடியாதம்மா... நாளைக் காலையில் பெங்களூரில் எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது. ஓரிரு தினங்களில் உங்களை பெங்களூரில் இருந்து காஞ்சிக்கு அனுப்பி வைக்கிறேன்!" என்றார்.

அந்த நேரத்தில் 'மானசீகமாக பெரியவாளை வணங்கு வதைத் தவிர வேறு வழியில்லை!' என தாய் முடிவெடுத் தாள். மனம் முழுக்க மகானின் நினைப்பு.

எல்லோரும் இரண்டு கார்களில் சென்னையிலிருந்து புறப்பட்டனர். காரில் ஒன்று, வேலூர் வந்து கிளை ரோட்டில் திரும்பியபோது, 'ஆக்ஸில்' உடைந்து நின்றுவிட்டது. காரைச் சரிசெய்யக் குறைந்தது இரண்டு மணி நேரமாவது ஆகும் என்று சொன்னார்கள்.

அந்த நேரத்தில்தான் அம்மாளின் மனதில் ஓர் எண்ணம் – 'அருகில்தானே காஞ்சிபுரம்... ஒரு கார் சரியாவதற்குள் இன்னொரு காரில் காஞ்சி போய் மகானைப் பார்த்து ஆசி வாங்கி வந்துவிடலாம்' என்று! அம்மாளின் இந்த முடிவுக்கு மகன் உட்பட உடன் வந்தவர்கள் எவரும் எதிர்ப்பு

தெரிவிக்க வில்லை. மற்றவர்களை அங்கேயே விட்டு, தம்பதி மட்டும் மகானை தரிசிக்க வந்தனர். அப்போது நடந்த வைபவம்தான் மேற்குறிப்பிட்டது.

மகானிடம் ஆத்மார்த்தமான அன்பு செலுத்துபவர்களை அவர் எப்போதும் கைவிட்டதில்லை என்பதற்கு இது ஓர் உதாரணம்.

மகாபெரியவரின் தரிசனத்துக்காக ஒரு நாள்பெரிய கும்பல் இருந்தது. அப்போது கும்பலை விலக்கிக்கொண்டு வந்தது ஓர் உயரதிகாரியின் பரிவாரம்!

“விலகுங்கள்… விலகுங்கள்” என்று கட்டியம் கூறிக்கொண்டே சிப்பந்திகள், பலவிதமான பழங்கள் அடங்கிய தட்டுகளைத் தடபுடலாகப் பெரியவர் முன்னால் வைத்தனர்.

அவர்களைத் தொடர்ந்து ஒரு தம்பதி – அதாவது அந்த உயரதிகாரியும் அவர் மனைவியும்! மடத்தின் சிப்பந்தி ஒருவர் மகானிடம், அவரை அறிமுகப்படுத்தினார். “மகா பெரியவாளைத் தரிசனம் பண்ண வந்திருக்கிறார்” என்று சொல்ல… உயரதிகாரி, மகானை வணங்கி எழுந்தார். பிறகு, தான் கொண்டு வந்திருந்த பழத்தட்டுகளை மகானிடம் சமர்ப்பித்தார்.

மெதுவாக குரலில் மகான் விசாரித்தார்: “என்ன இதெல்லாம்?”

“மகா பெரியவாளின் சந்நிதானத்துக்கு அடியேனின் காணிக்கை!” என்றார் அதிகாரி.

மகானின் முகத்தில் லேசான சிரிப்பு. "நானோ சந்நியாசி… பழங்களைச் சாப்பிடுவது இல்லையே.”

உயரதிகாரி நெளிந்தார்.

மடத்து சிப்பந்தி ஒருவரை அருகில் அழைத்து, “ஒரு காரியம் செய்… இந்தப் பழங்களை எடுத்துக் கொண்டுபோய் வெளியிலுள்ள எல்லோருக்கும் கொடு” என்றார்.

அருகில் இருந்து பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? ‘பக்தியோடு ஒருவர் கொண்டு வந்து கொடுத்ததை ஏன் வேண்டாமென்று சொல்கிறார்? நாம் கையில் கொண்டுவந்திருக்கும் பொருட்களையும் வேண்டாம் என்று சொல்லிவிடுவாரோ?’

இப்படிப்பட்ட சிந்தனை அங்கே இருந்தவர்கள் மனதில் நிச்சயம் எழுந்திருக்கும். குறிப்பாக, மனைவியுடன் வந்திருந்த அந்த அன்பர் இந்தச் சம்பவத்தால் ரொம்பவே மனம் வருத்தமுற்றார். காரணம் அவரும் பழங்களுடன் மகான் தரிசனத்துக்காக வரிசையில் நின்றிருந்தார்.

அன்பரின் முறை வந்துவிட்டது. தான் கொண்டுவந்த பழங்களை ஒரு மூங்கில் முறத்தில் மகான் முன் வைத்துவிட்டு பக்தியுடன் அவர் பாதங்களில் விழுந்து எழுந்தார்.

புன்னகை தவழும் முகத்துடன் மகான் அந்த அன்பரைப் பார்த்தார். பிறகு தன் அருகில் இருந்த உதவியாளரை அழைத்து, “இந்தப் பழங்களையெல்லாம் பத்திரமாக உள்ளே கொண்டு போய் வை” என்றார். அன்பரை அருகே அமருமாறு சைகை செய்துவிட்டுச் சொன்னார்: “இப்ப வந்திருந்தாரே.. அந்த அதிகாரியிடம் தங்கள் காரியம் ஆகவேண்டுமென்று யார் யாரோ பழங்கள் கொண்டு வந்து கொடுத்திருப்பார்கள். அதை எதற்கு இங்கே கொண்டு வரணும்? அதான் அனுப்பிட்டேன்.”

அன்பர் இதைக் கேட்டவுடன், தான் மகானைத் தவறாக நினைத்ததற்காக ‘மகாபிரபு…. மகாபிரபு’ என்று கன்னத்தில் போட்டுக் கொண்டே ஆனந்தக் கண்ணீர் சிந்தினார்.



திருச்சியில் ஒரு பக்தர். புகைப்படக்காரர். சிறிய ஸ்டூடியோ வைத்திருந்தார். வீட்டு பூஜையறையில் காஞ்சி மகானின் படம் பிரதானமாக இருக்கும்!

தினம் காலையில் எழுந்து குளித்த பிறகு, ஏதாவது ஒரு படையலை மகாபெரியவர் முன் வைத்து வணங்கிவிட்டுத்தான், தன் வேலையை ஆரம்பிப்பார்! பெரியவாளின் நாமத்தை அவரது உதடுகள் உச்சரித்துக்கொண்டே இருக்கும்.

ஒரு தடவை பெரியவா, ஆந்திர மாநிலத்தில் உள்ள கர்னூலுக்கு விஜயம் செய்திருந்தார். அதுவோ உஷ்ணப் பிரதேசம். வெயில் கடுமையாகக் கொளுத்திக் கொண்டிருந்தது.

திருச்சியில் உள்ள இந்தப் புகைப்படக் கலைஞருக்கு ‘பெரியவாளைத் தரிசிக்க வேண்டும்’ என்று மனதில் ஆசை வந்தது. அன்று காலை ரயிலில் புறப்படும் முன், வழக்கம்போல் பெரியவா படத்துக்கு முன்னால் படையலாக சூடான பாலை ஒரு டம்ளரில் ஊற்றிவைத்துவிட்டுப் போனார்!

கர்னூலில் அளவுக்கு அதிகமாக பக்தர் கூட்டம். எங்கு திரும்பினாலும் மக்கள் வெள்ளம். நமது புகைப்பட நிபுணர் எப்பக்கமும் உள்ளே செல்ல முடியவில்லை. சற்றுத் தூரத்தில் இருந்த மணற்குவியல் ஒன்றின் மீது ஏறி நின்று மகா பெரியவாளைத் தரிசிக்க முயன்றார். வெயிலின் கொடுமையால் கால் ஒரு பக்கம் சுட்டது. கும்பல் குறைந்தவுடன், மாலையில் வந்து பார்த்துக்கொள்ளலாம் என்று மனதில் கவலையோடு புறப்பட்டார். இவ்வளவு தூரம் வந்தும் மகானை உடனடியாகப் பார்க்க முடியவில்லையே என்கிற ஏக்கம் அவருக்கு!

சற்றுத் தூரம்தான் நடந்திருப்பார். யாரோ அவரைக் கூப்பிடுவதுபோல் தோன்றவே, திரும்பிப் பார்த்தார்.

ஒரு பக்தர் வேகமாக இவரிடம் ஓடி வந்தார். “நீங்க திருச்சியிலிருந்துதானே வந்திருக்கீங்க?”

“ஆமாம்!”

“பெரியவா உங்களை அழைத்துக்கொண்டு வரச் சொன்னார்!”

“என்னையா?” பக்தருக்கு வியப்பு!

“நீங்க போட்டோகிராபர்தானே?”

“ஆமாம்!”

“அப்படியென்றால் வாருங்கள்...”

விடாப்பிடியாக அவரை அழைத்துக்கொண்டு போய் பெரியவா முன் நிறுத்தினார் அந்தச் சிஷ்யர். கைகளைக் கூப்பியவாறு, கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓட, புகைப்படநிபுணர் தன்னை மறந்து அங்கே நின்றார்.

அவரை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்த மகான், “என்னைப் பார்க்கணும்னு இவ்வளவு தூரம் கிளம்பி வந்திருக்கே... கடைசியிலே பார்க்காமலேயே போனா என்னப்பா அர்த்தம்?” என்றார்.

“கும்பல் நிறைய இருந்தது... அதான் கொஞ்சம் குறைஞ்சவுடனே வரலாம்னு...” என்று தடுமாற்றத்துடன் இழுத்தார் புகைப்படக்காரர்.

“சரி, சரி... சாப்பிட்டியோ?”

“சாப்பிட்டேன்!”

சில விநாடிகள் தாமதத்துக்குப் பின் மகான் பேசினார்: “என் வாயைப் பார்த்தியோ?”

நாக்கை வெளியே நீட்டுகிறார். சூடுபட்டது போல் சிவந்திருக்கிறது! பிறகு கேட்டார்: “உதடெல் லாம்கூடப் புண்ணாயிட்டது... ஏன் தெரியுமா?”

புகைப்படநிபுணருக்குப் புரியவில்லை.

“நீ பாலைச் சூடா வெச்சுட்டு, அவசர அவசரமா கிளம்பி வந்துட்டே இல்லையா... அதான்!” என்றார்.

திருச்சிக்காரருக்குப் புறப்படும்போது தான் வைத்த படையல் அப்போதுதான் நினைவுக்கு வந்தது.

சாஷ்டாங்கமாக மகானின் திருவடியில் விழுந்து, “மகாபிரபு, என்னை மன்னியுங்கள்!” என்று கதறினார்.

எந்தளவுக்கு பக்தி இருந்திருந்தால், மகாபிரபு அந்த பக்தரின் பாலை ருசித்திருப்பார் என்பதைச் சற்றே எண்ணிப் பாருங்கள். அது சாத்வீகமான பக்தி! ‘ஆண்டவனே, நீதான் எனக்கு எல்லாம்!’ என்று மனதார நினைக்கும் பக்தி.

பெரியவாளைப் பார்க்க வரும் கூட்டம் பெரும்பாலும் நிரந்தரமானது. யார் யார், எங்கிருந்து வருகிறார்கள் என்பதையும் பெரியவா நன்றாகவே அறிந்து வைத்திருந்தார்.

அன்று கூட்டத்தில் ஒரு மூதாட்டி, பகவானின் அருட்கடாட்சத்துக்காக நின்று கொண்டிருந்தார். சேவை முடிந்ததும் ஒரு தட்டில் சில பழங்களை வைத்து, அந்த அம்மையாரை எடுத்துக்கொள்ளச் சொல்கிறார்.

மிகவும் திருப்தியாகப் பழங்களை எடுத்துக்கொண்ட அந்த அம்மையார், பழத்தோடு சேர்ந்துவந்த மெல்லிய மருக்கொழுந்து காம்பு ஒன்றை எடுத்துக் கீழே போட்டு விட்டு, பழங்களை மட்டும் எடுத்துப் பையில் போட்டுக் கொண்டார்!

“அதையேன் கீழே போட்டுட்டே? அதுவும் உபயோகமா இருக்கும். எடுத்துக்கோ!” என்றார் மகான் சிரித்தவாறே.

பெரியவா சொல்லிவிட்டாரே என்பதற்காக, அந்த அம்மையாரும் மருக்கொழுந்துக் காம்பை எடுத்துத் தனது பையில் போட்டுப் பத்திரப்படுத்திக் கொண்டார்.

‘ஏன் இதை பத்திரமாக எடுத்துக்கொண்டு போகச் சொன்னார்?’ என்றெல்லாம் அந்த அம்மாள் அப்போது யோசிக்கவில்லை. மகானிடம் கேட்கவும் இல்லை!

தன் ஊருக்குப் போக அம்மையார் பஸ்ஸில் ஏறி அமர்ந்துவிட்டார். பஸ் புறப்பட்டதும் அப்படியொரு தூக்கம். அருகில் இருந்த பெண், தூங்கும் அம்மையாரின் பையிலிருந்த பணப்பையைத் திருடிக் கொண்டாள்.

கண்டக்டர் வந்தார். டிக்கெட் எடுக்க வேண்டுமல்லவா? குரல் கேட்டு விழித்தெழுந்த அம்மையார், பையில் பணப்பையைத் தேடினார். அது அங்கே இல்லை! பக்கத்தில் இருந்த பெண்ணின் கையில் இருந்தது.

“அது என் பர்ஸ்!” என்று இந்த அம்மையார் பதற்றத்தில் கதற... “இல்லை, இல்லை... இது என்னுடையதுதான்!” என்று பக்கத்திலிருந்த பெண் சொல்ல, அங்கே களேபரம் ஆகிவிட்டது! ‘பர்ஸில் இவ்வளவு பணம்தான் இருக்கிறது’ என்று கச்சிதமாகச் சொல்கிறாள். எடுத்தவள் எண்ணியும் வைத்திருக்கிறாள் என்பது பர்ஸின் நிஜ சொந்தக்காரிக்கு மட்டுமே தெரியும்!

கண்டக்டரோ, யாரை நம்புவது என்று தெரியாமல் தத்தளிக்கிறார்.

அப்போதுதான் அந்த அம்மையாருக்குப் பெரியவா மருக்கொழுந்து காம்பைப் பத்திரமாக எடுத்துக்கொண்டு போகச் சொன்னது ‘பளிச்’ சென்று ஞாபகத்துக்கு வந்தது.

“கண்டக்டர் சார்... அந்த பர்ஸில் வேறொரு வஸ்து இருக்கிறது. அது என்னவென்று இந்தப் பெண்ணைச் சொல்லச் சொல்லுங்கள்.”

திருடியவளிடமிருந்து இதற்கு எப்படிப் பதில் வரும்?

“நான் சொல்கிறேன்... மருக்கொழுந்தின் சிறிய காம்பு ஒன்று உள்ளே இருக்கிறது. வாசனை உள்ளது மருக்கொழுந்து. வேண்டு மானால் அந்த பர்ஸைத் திறந்து பாருங்கள், தெரியும்!” என்றார் அம்மையார். கண்டக்டர் புதியவளிடமிருந்து பர்ஸை வாங்கிப் பார்க்க – உள்ளே, அந்த மருக்கொழுந்து காம்பு பத்திரமாக இருந்திருக்கிறது!

பிறகென்ன... திருடியவள் தன் தவறை ஒப்புக்கொண்டாள். அம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்க அவள் மன்னித்து விடப்பட்டாள்.

தன் பக்தர்களுக்கு இடர் வருவதை முன்கூட்டியே அறிந்து, அதற்கான நிவர்த்தியுடன் அனுப்பும் அந்த மகானின் கருணை உள்ளத்தை எவ்வாறு அளவிட முடியும்?



ஒரு கணவன் - மனைவி, காஞ்சி காமாட்சிக்கு விலையுயர்ந்த பட்டுப்புடவையுடன் தரிசனத்துக்கு வந்தார்கள். அந்தச் சமயத்தில் மகா சண்டிஹோமம் நடந்துகொண்டிருந்தது. காஞ்சி மகான் முன்னிலை வகித்தார்.

ஹோமம் நடக்கும் இடத்துக்கு அருகே வந்த அந்தத் தம்பதி, ஒரு தட்டில் பட்டுப்புடவையை வைத்துப் பெரியவா அருகில் நகர்த்தினார்கள்.

ஹோமத்தில் பூரணஆஹுதி நடந்தபோது, இந்த விலையுயர்ந்த பட்டுப்புடவையும் குண்டத்தில் விழுந்தது.

காமாட்சியம்மனுக்கு உடுத்தவேண்டும் என்று, தாங்கள் கொண்டுவந்த விலையுயர்ந்த பட்டுப்புடவை ஹோம குண்டத்தில் விழுந்தது கண்டு அதிர்ச்சியுற்ற அந்தத் தம்பதி மிகுந்த வேதனை அடைந்தனர்.

ஆனாலும், அதை எப்படி வெளியே சொல்ல முடியும்? 'ஏன் இப்படிச் செய்தீர்கள்?' என்று மகா பெரியவாளிடம் கேட்க முடியுமா?

ஹோமம் முடிந்தது.

காமாட்சிக்கு அலங்காரம் நடந்து கொண்டிருந்தது. முன்னால் திரைச்சீலை போட்டிருந்தார்கள்.

தம்பதியும் காமாட்சிக்கு முன்னால் உட்கார்ந்திருந்தார்கள். தங்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அந்த மகானுக்குத் தெரியாதா, என்ன?

சுமார் அரை மணி நேரத்துக்குப் பிறகு திரைச்சீலை விலக்கப்பட்டது. கண்களைக் கொள்ளைகொள்ளும் அலங்காரத்தோடு காமாட்சி ஜொலித்தாள்.

மகா பெரியவா அந்தத் தம்பதியின் பக்கம் திரும்பி, 'அம்பாளைப் பாருங்கள்!' என்பதாக புன்னகை தவழும் முகத்துடன் ஜாடை காட்டினார். அவர்களும் அம்பாள் பக்கம் திரும்பினார்கள்.

இவர்கள் கொண்டுவந்த அதே பட்டுச்சேலை, அம்பாளின் திவ்ய சொரூபத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது! வியப்படைந்த தம்பதி, மகானின் திருவடி பணிந்து ஆசிபெற்றனர்.

யார் எதைக் கொண்டுவந்தாலும், அதை எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அந்த மகானுக்குத் தெரியாதா?

ஒரு தடவை ஆந்திராவில் மகா பெரியவா முகாமிட்டு இருந்தபோது நடந்த சம்பவம் இது.

வழக்கமான பூஜை நேரம். மகான், சிறிய காமாட்சி உருவச்சிலையை முன்னால் வைத்து பூஜையை ஆரம்பித்துவிட்டார்.

அந்த நேரத்தில், எங்கிருந்தோ வந்த ஒருத்தி ஏகமாகச் சத்தமிட்டுக்கொண்டு, "எனக்குப் புடவை கொடு... புடவை கொடு!" என்று கூவினாள். ரகளை செய்தாள்.

அவள் உடலில் பழைய புடவை ஒன்று கந்தல் கந்தலாகக் காட்சியளித்தது. அவளின் இடது முழங்காலுக்கு மேலே புடவை கொஞ்சம் பெரிதாகவே கிழிந்திருந்தது.

‘பூஜை நேரத்தில் இப்படியொரு தொல்லையா?’ என்று பெரியவாளின் சிஷ்யர்கள், அவளை அங்கே இருந்து விரட்டத் தொடங்கினார்கள்.

அமைதியாக அவளைப் பார்த்த மகான், அவர்களைப் பார்த்துக் கையமர்த்திவிட்டு, ஒரு பட்டுப்புடவையைக் கொண்டுவரச் சொல்லி, அதைத் தட்டில் பழங்களோடு வைத்து அவளிடம் கொடுத்தார். புடவையை எடுத்துக்கொண்ட அவள், அங்கிருந்து வேகமாகப் போய்விட்டாள்.

அங்கிருந்த சிஷ்யர்களில் ஒருவருக்கு மனதில் ஏதோ சந்தேகம்... அவள் பின்னாலேயே வேகமாகப் போனார். ஆள் நடமாட்டம் குறைந்த இடத்தை அந்த சிஷ்யர் கடந்தபோது, அவர் கன்னத்தில் யாரோ ‘பளீர்’ என்று அறைந்தது போலிருந்தது!

அங்கேயே மயங்கி விழுந்தவர், பெரியவா இருந்த இடத்துக்கு வரச் சற்று நேரமாயிற்று.

“என்னடா... புடவை என்னாச்சுனு பார்க்கப் போனியோ? வந்தவ அம்பாள்டா மடையா!” என்று தன் முன்னே இருந்த விக்கிரகத்தைச் சுட்டிக் காட்டினார் மகா பெரியவர்.

வந்தவளின் உடலில் புடவை எங்கு கிழிந்திருந்ததோ, அதே இடத்தில்தான் தேவியின் சிலையில் உடுத்தப்பட்டிருந்த சேலையும் கிழிந்திருந்தது!

தனக்கு என்ன தேவை என்று மகானிடம் நேரில் கேட்டுப் பெறும் வழக்கத்தை அந்த அம்பாள் கடைப்பிடித்து வந்திருக்கிறாள்!

## விபத்து... உபசரிப்பு!

நான் ஆற்காட்டில் தாசில்தாராகப் பயிற்சி முடியும் தறுவாயில் புதிதாக வாங்கிய இரு சக்கர வாகனத்தில் என் உதவியாளரை அழைத்துக்கொண்டு ஆற்காட்டிலிருந்து கலவைக்கு புறப்பட்டேன். வழியில் இரு பக்கங்களிலும் நெல்வயல்கள் பச்சைப் பசேலென்று காட்சியளித்தன. ஒரு வீடுகூடத் தென்படவில்லை. அப்போது திடீரென வானம் இருட்டிக்கொண்டு, அடைமழை பெய்ய ஆரம்பித்தது. எதிரில் யார் வருவது என்றுகூடத் தெரியாமல் வண்டி ஓட்டிச் சென்றேன். எதிரே ஒரு பெண்மணி தலையில் சுமையுடன் பாதையின் குறுக்கே சென்றுகொண்டிருந்தாள். அவள் மீது மோதாமல் இருக்க வண்டியைத் திருப்பி வாய்க்காலில் இறக்கிவிட்டேன். இதனால் என் நெற்றியில் அடிபட்டு ரத்தம் வழிய ஆரம்பித்தது. என் உதவியாளருக்கும் லேசான அடி. குறுக்கே வந்த பெண் தடுமாறியதில் அவளுக்கும் அடி.

அந்த நேரம் பார்த்து பன்னாட்டு நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தன் குடும்பத்துடன் காஞ்சிப் பெரியவரைத் தரிசனம் செய்து, திரும்பிக்கொண்டிருந்தார். விபத்தைப் பார்த்ததும் தன் வண்டியிலிருந்து இறங்கினார். எனக்கும் என் உதவியாளருக்கும் முதலுதவி செய்தார். அடிபட்ட பெண்மணியை ஒரு பேருந்தில் ஏற்றிஅரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு அவர் கிளம்பினார்.

அதே மருத்துவமனைக்கு நானும் சென்று சிகிச்சை பெற்றேன். பல வருடங்களாக எந்த மருத்துவரைப் பார்க்க வேண்டும் என்று நினைத்திருந்தேனோ, அவரே எனக்கும் என் உதவியாளருக்கும் சிகிச்சை செய்தார். அவர் என்னுடன் பள்ளியிறுதி ஆண்டுவரை படித்தவர். மிக அன்பானவர். அவரை நான் சந்தித்தது ஓர் அதிசய நிகழ்ச்சி என்றே கருதுகிறேன்.

உடை மாற்றிக்கொண்டு மஹா சுவாமிகளைப் பார்க்கச் சென்றேன். முதலில் அவர் கேட்ட கேள்வி என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது: ‘விபத்தில் பலமா அடிபட்டுதா?’ மஹா சுவாமிகளின் அற்புத ஞான திருஷ்டியைக் கண்டு வியந்தேன்.

– **க.லா.சம்பத்,** சென்னை-10



குழந்தைகளிடம் பெரியவாளுக்கு எப்போதுமே அதிக அக்கறை உண்டு. சமூகத்தில் அவர்கள் நன்றாகக் கவனிக்கப்பட வேண்டும்... உணவு, படுக்க இடம், படிப்பு இதெல்லாம் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்திக் கொண்டு இருப்பார்.

வடஇந்தியாவில் மகா பெரியவா யாத்திரை செய்து கொண்டிருந்த நேரம்... தன்னை வழிபட வரும் பக்தர்களிடம் மகான் கேட்கும் முதல் கேள்வி– 'உனக்கு எத்தனை குழந்தைகள்?'

அதிகக் குழந்தைகளைப் பெற்றெடுத்து வறுமையில் வாடுபவர்களைப் பார்த்து பெரியவாள் இரக்கப்படுவார். அங்கே குக்கிராமங்களில் பெரியவாளைத் தரிசிக்க வரும் பலர், குடிசைகளில் வசிப்பவர்கள்.

எப்படித் தங்களுக்குக் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் இந்தக் குழந்தைகள் உண்டு, உடுத்தி, படித்து முன்னேறுவார்கள் என்கிற கவலை இருந்தது மகா பெரியவாளுக்கு!

'அஞ்ஞானத்திலிருந்து விலகி நல்ல பாதைக்கு எல்லோரும் வரவேண்டும். சிறுவயதிலேயே குழந்தைகளுக்கு ஞானம் வரவேண்டும். பெரியவர்கள் ஆனபிறகு வருவது மிகவும் கடினம். பகவான் அனுக்கிரகம் அவர்களுக்கு வரவேண்டும். அதற்குத் தேவை பக்தி! அதை நாம்தான் கொடுக்க வேண்டும்' என்று சொல்வார்.

ஒரு தடவை பெரியவா சொன்னார்... 'நானும் ஓயாமல் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். யாராவது கேட்டு, அதன்படி நடக்கிறீர்களா என்று எனக்குத் தெரியாது. இப்பகூட நீங்களெல்லாம் 'பர்த்டே', 'மேரேஜ்டே' என்று வீட்டில் பெரிய விசேஷம் நடத்தறீங்களா, இல்லையா?

அதாவது – உங்களுக்கு வேண்டியவர்களை மட்டும் அழைத்துக் கொண்டாடும் விழா இது. அப்போது நம்மைச் சுற்றியிருக்கிற மற்றவர்கள், அதாவது – வேலைக்காரர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளும் நல்லா இருக்காங்களானு கொஞ்சம் கவனிக்க வேண்டாமோ?

நம்மை மட்டும் அப்பப்போ திருப்தி பண்ணிக்கிறது நல்லாவா இருக்கு? சுற்றி இருக்கிறவங்களுக்கும் நல்ல டிரஸ், புத்தகம் வாங்கிக் கொடுக்கலாம், இல்லியோ? சரி, இப்போ நான் இதுக்காக ஒரு யோசனை சொல்றேன். உங்கள் வீட்டிலேயோ அல்லது தெரிஞ்சவங்க வீட்டிலேயோ 'பர்த்டே' மாதிரி ஏதாவது நிகழ்ச்சிகள் வந்ததுன்னா, அன்னிக்கு மறக்காம மடத்துக்கு அஞ்சு ரூபா மணியார்டர் அனுப்புங்கோ...

அந்தப் பணத்தை, இங்கே வேதம் படிக்கிற பிள்ளைங்களுக்காக நான் செலவு பண்ணுவேன். நீங்க அனுப்புற பணத்துக்கு ரசீதும் பிரசாதமும் தவறாம அனுப்பறேன். இதனால ஒரு நல்ல காரியம் செஞ்ச திருப்தி வாங்கிக்கிற எனக்கும் கொடுக்கிற உங்களுக்கும் வரும் இல்லையா?' என்று முடித்தார் மகான்.

பிறகு அவரே தொடர்ந்து, 'வேதம் படிக்கிற குழந்தைகளுக்கு நீங்க என்ன கொடுத்தாலும் நான் கைநீட்டி வாங்கிக்கிறேன். இந்தக் குழந்தைகள் எல்லாவற்றையும் உதறித் தள்ளிட்டு, இங்கே வேதம் படிக்க வந்திருக்கு.

இந்தக் குழந்தைகள் படிச்ச வேதம் கிராமம் கிராமமாகப் பரவும். அதனால நாட்டுக்குத்தான் நல்லது நடக்கும்!' என்று சொன்னார்.

1955–லிருந்து பெரியவா சொன்னதற்கிணங்க பணமழை ஐந்தும் பத்துமாகப் பொழிய ஆரம்பித்து விட்டது! இவ்வளவுதான் வருகிறது என்று சட்டென்று எண்ணிச் சொல்ல முடியாத அளவுக்கு வந்தது!

அப்போது மடத்துக் கைங்கரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்தவர் அண்ணாதுரை ஐயங்கார் என்பவர். மெத்தப் படித்த ஞானி. மடத்தோடு ஐக்கியமானவர்.

மடத்தில் கொட்டும் பணத்தைக் கையெழுத்துப் போட்டு வாங்கி, அதற்கு ரசீது போட்டு, அதனுடன் பிரசாதமும் அனுப்பவேண்டும். மூன்று பேர் இடைவிடாமல் செய்யக்கூடிய வேலையை அண்ணாதுரை ஒருவரே செய்து கொண்டிருந்தார். ஒருகட்டத்தில் அவரால் சமாளிக்க முடியவில்லை!

'பெரியவா, குழந்தைகள் நலன் மேல் அக்கறை வைத்து இப்படிச் சொல்லப் போக, பணமழை மடத்தை நனைக்கிறதே' என்று அண்ணாதுரை ஐயங்கார் சற்று மிரண்டும் போனார். பெரியவாளிடமே போய் தன் வேலைப்பளுவைச் சொல்லுவோமே என்று அவரிடம் வந்தார்.

மெள்ள ஆரம்பித்தார்: 'ஒரு விண்ணப்பம்... குழந்தைகள் நலனுக்குன்னு நீங்க சொல்ல ஆரம்பிச்ச பிறகு பக்தர்கள் ஐந்து, பத்துனு போட்டி போட்டுட்டு அனுப்ப ஆரம்பிச்சுட்டாங்க. அவர்களுக்கு ரசீது போட்டு, ஒரு கவரில் பிரசாதத்துடன் அனுப்புகிறோம். அதுக்கு எட்டணா செலவாகிறது. அனுப்புறது ஐந்து ரூபாய்... அதுக்குச் செலவு எட்டணா! அதனால, தபால்ல அனுப்புறதை நிறுத்திட்டு, இங்கே நேர்ல வர்றவங்களுக்கு மட்டும் பிரசாதம் கொடுப்போமே" என்று மெல்லிய குரலில் சொன்னார்.

பெரியவா இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார் என்பதைக் கேட்க, அண்ணாதுரை ஐயங்கார் சற்றுத் தள்ளி நின்றார். அவரை மகான் மேலும் கீழும் ஒரு தடவை பார்த்தார்.

"ஒரு பெரிய சபையிலே... மடாதிபதி, நான் பக்தர்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன். இப்போ பிரசாதத்தை நிறுத்தினா, அவங்கல்லாம் என்ன நினைப்பாங்க? அவ்வளவு ஜனங்க மத்தியில நான் சொன்னது பொய்னு ஆயிடாதா? உங்களுக்கு இருக்கிற கஷ்டத்தை நிவர்த்திக்க, நீங்க இப்படி யோசனை சொல்லலாம்! அதேநேரம் அதன் விளைவு எவ்வளவு மோசமா இருக்கும்னு நீங்க நினைக்கவே இல்லையா? பணம் அனுப்புற நேரத்துல, அவங்க காஞ்சி மடத்தை நினைச்சுக்கிறாங்க. பக்தியோடு பணத்தை அனுப்பிட்டு, இங்கிருந்து நிச்சயம் பிரசாதம் வரும்னு எதிர்பார்க்கிறாங்க!

பக்தர்களை ஏமாத்தலாமோ? அவங்களுக்கும் பணம் அனுப்புறதே சிரமமாத்தான் இருக்கும். அதனால, பிரசாதம் அனுப்புறதை மட்டும் நிறுத்தவே நிறுத்தாதீங்கோ!"

அண்ணாதுரை ஐயங்கார் தான் சொன்னது தவறு என்பதை உணர்ந்தார்.

தன் சிரமத்தைப் பார்த்தால், மற்றவர்களின் பக்தியை உதாசீனப்படுத்தியது போலாகிவிடாதா?

**ஒ**ரு சமயம் மடத்தில் பெரியவா அமர்ந்து அடியார்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் கும்பலை விலக்கிக்கொண்டு ஏழு அல்லது எட்டு வயதுச் சிறுவன் ஒருவன், கையில் சிறு ஆட்டோகிராப் புத்தகத்துடன் வேகமாக வந்து பெரியவா முன் நின்றான்.



“டேய்... டேய்...” என்று மற்றவர்கள் அலறியதை, அவன் பொருட்படுத்தவே இல்லை. பெரியவா முன் நின்ற அவன், தன் கையில் இருந்த ஆட்டோகிராப் நோட்டை அவரிடம் நீட்டி, “பெரியவா... இதுலே ஒரு கையெழுத்து போட்டுக் குடுங்க!” என்றான்.

“எதுக்குடா என் கையெழுத்து?” மகான் கேட்கிறார்.

“இதோ பாருங்க... எல்லார் கையெழுத்தும் இதிலே இருக்கு. உங்க கையெழுத்தும் இருந்தா நல்லாருக்கும்” என்றான்.

பெரியவா ஒரு கணம் தயங்கினார்.

“சார்... சார்... உங்க கையெழுத்தைப் போடுங்க சார்!” என்று பெரியவாளிடம் கெஞ்சினான். கூடியிருந்த அனைவரும் வியப்பு மேலிட ‘என்ன செய்வது’ என்று தவித்தபடி நின்றிருந்தனர்.

சிறுவன் தன் காரியத்தில் பிடிவாதமாக இருக்கவே, மடத்து நிர்வாகியை மகான் அழைத்து, “பையனை உள்ளே அழைத்துக் கொண்டுபோய், இந்த நோட்லே சங்கரமடத்து சீல் அடித்து நாராயண ஸ்துதினு எழுதி உன் கையெழுத்தைப் போட்டுக் கொடு... சந்நியாசிகள் கையெழுத்துப் போடக்கூடாது” என்றார்.

நிர்வாகியும் பெரியவா சொன்னது, போலவே ஆட்டோகிராப் புத்தகத்தை நிரப்பி, பையனிடம் கொடுத்து அனுப்பினார்.

“ஆட்டோகிராப் வாங்கிட்டேன்” என்று சொல்லிக் கொண்டே பையன் ஓடி வந்தான். எல்லோர் முகத்திலும் வியப்பு.

பெரியவாளிடம் வந்து, “தாங்க்யூ சார்!” என்று கௌரவமாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து நகரப் பார்த்தான்.

அப்போது, “கொஞ்சம் நில்லு!” என்றார் மகான்.

சிறுவன் நின்றான்.

“எங்க கையெழுத்தை நீ வாங்கிண்டுட்டே. உன் கையெழுத்து எனக்கு வேணுமே! எங்க ஆபீஸிலே உள்ள ரெஜிஸ்தர்லே உங்க கையெழுத்தைப் போட்டுத் தர்றேளா?” பெரியவா கேட்டார்.

“அதுக்கென்ன, போடறேனே!” என்றான் சிறுவன், பெரிய மனிதர் தோரணையில்! மடத்தின் விசிட்டர்ஸ் நோட்டு அங்கேயே கொண்டு வரப்பட்டு அதில் அவன் கையெழுத்தும் வாங்கியாயிற்று.

மீண்டும் ஒரு தடவை “தாங்க்யூ சார்!” என்று சொல்லிவிட்டு அவன் புறப்பட்டான்.

சிறுவன் என்றாலும், பெரியவர்கள் என்றாலும் அவரது சந்நிதானத்தில் ஒரே மாதிரியான வரவேற்பும் உபசரிப்பும் தான்.

மகா பெரியவா 1940–ம் வருடம் தனது அகில இந்திய யாத்திரையை ஆரம்பித்தார். முதலில் திருப்பதி. அதைத் தொடர்ந்து பல ஊர்கள் – காசி, கயா என்று திவ்யக்ஷேத்திரங்கள் அந்தப் பட்டியலில் இருந்தன. கயாவில் சங்கர மடத்தை நிறுவியதும் அப்போதுதான்!

அவருடன் சென்ற முப்பது அடியார்கள், அவருடைய நிழலைப் போலவே இருந்தார்கள் என்றால், அதுதான் உண்மை. ஒவ்வொரு கிராமத்திலும் அவரது காலடிபட்டது. வறட்சியாக இருந்த கிராமங்கள் செழித்தன.

கல்கத்தா, விசாகப்பட்டினம் வழியாக ராமேஸ்வரம் வந்து சேர்ந்தார். வந்தவர், ராமநாதசுவாமி கோயிலை அடைந்து, சுவாமிக்குத் தன் கையால் அபிஷேகம் செய்ய ஆரம்பித்தார். கங்கை தீர்த்தம் போன்றவை அவருடன் கொண்டு வரப்பட்டிருந்தன. அந்தத் தீர்த்தங்கள் அபிஷேகத்துக்குப் பயன்பட்டன.

இந்த நேரத்தில் ராமநாதபுரம் சமஸ்தான ராஜாவும் அங்கே வந்திருந்தார். மூன்று மணி நேரம் அபிஷேகம் நீடித்தது. அபிஷேகம் முடிந்ததும் ராஜா உட்பட எல்லோரும் மகானின் அருளுரையைக் கேட்க விரும்பினர்.

நிதானமாக அவர்களுக்கு உபதேசம் செய்த மகான், ஓர் இடத்தில் தன் பேச்சை நிறுத்திவிட்டார்! கமண்டலத்திலிருந்து கொஞ்சம் நீரை அருந்திவிட்டு திடீரென மௌனமாகிவிட்டார்!

தொடர்ந்து, அங்கிருந்து புறப்பட்ட அவர் நேராக கும்பகோணம் வந்து, அங்கு செய்யவேண்டிய பூஜைகளை முடித்துக் கொண்டு, தன் இருப்பிடமான காஞ்சிக்கு வந்தார். ராமேஸ்வரத்தில் ஆரம்பித்த மௌனம், ஆறு மாத காலம் தொடர்ந்து நீடித்தது!

மகானின் வாயிலிருந்து பேச்சே வரவில்லை. மௌனமாகவே அவரது தெய்வீகக் காரியங்கள் தொடர்ந்து நடந்தன. இதற்கு என்ன காரணம் என்று யாருக்குமே தெரியாது! ‘ஏன் இப்படி?’ என்று அவரிடம் கேட்கும் தைரியம் யாருக்கும் இல்லை.

ஒரு நாளில், மகானே தன் மௌனத்தைக் கலைத்தார்! பயபக்தியோடு சிலர் அவரை அணுகி, “இந்த மௌனத்துக்கு என்ன காரணம்?” என்று கேட்டனர்.

அவர் திருப்பிக் கேட்டார்: “ஏண்டா... நான் உங்ககிட்ட ‘பர்மிஷன்’ வாங்கிண்டுதான் மௌன விரதம் அனுஷ்டிக்கணுமோ?”

கேட்டவர்கள் வாயடைத்துப் போயினர்!

தொடர்ந்து மகான், “இருபது வருடமாக ஓயாமல் பேசிண்டே இருந்தேனில்லையா? அதுக்காகத்தான் இந்தத் திடீர் மௌனம்!” என்றாரே பார்க்கணும். சுற்றியிருந்தவர்கள் மௌனமாகப் புன்னகை புரிந்தனர்.



**வி**ழுப்புரம் அருகில் உள்ளது வடவாம்பலம் கிராமம். 1926–ஆம் வருடம் மகாபெரியவா அந்த வழியாகப் போகும்போது மனதில் ஏற்பட்ட திடீர்ச் சலனத்தின் காரணமாக, அந்தக் கிராமத்துக்குள் தன் பரிவாரங்களுடன் நுழைந்தார்.

“இங்கே ஒரு சந்நியாசி இருந்தாரே, ஞாபகமிருக்கா?” என்று எதிர்ப்பட்ட கிராமத்து முதியோர்களிடம் கேட்டார்.

யாருக்கும் தெரியவில்லை! ஆனால், அந்தக் கும்பலில் இருந்த ஒரு முதியவர் மட்டும், அந்த ஊரில் பல வருடங்களுக்கு முன் ஒரு துறவி இருந்ததாகவும், அவர் அதே கிராமத்தில் சமாதி அடைந்ததாகவும் சொன்னார். இரண்டு, மூன்று வருடங்கள் அவரது சமாதிக்குப் பூஜைகள் தொடர்ந்து நடந்ததாகவும், பிறகு அது நின்றுபோனதாகவும் சொன்னார்.

ஆத்மபோதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் என்னும் 58-வது பீடாதிபதி அங்கேதான் சமாதி எய்தியிருக்கிறார் என்பதைத் தெரிந்துகொண்ட மகான், அந்தக் கிராமம் முழுக்கத் தேடி, அவரது சமாதியைக் கண்டுபிடித்தார். பிறகு தன்னுடன் வந்த அடியார்களில் ஒருவரிடம் அந்த இடத்தைத் தோண்டச் சொன்னார்.

“அகலமாக வேண்டாம்... ஆழமாகத் தோண்டுங்கள்!” என்று கட்டளையிட்டார். மண்வெட்டி எடுத்து, மகான் காட்டிய இடத்தைத் தோண்டினார் ஒருவர். அப்போது, அருகில் இருந்த குமாரமங்கலம் சாம்பமூர்த்தி சாஸ்திரி என்பவர், மெய்ம்மறந்து, “தோண்டாதே... தோண்டாதே” என்று கூச்சலிட்டு, அங்கேயே மயங்கி விழுந்தார். தோண்டிய ஆசாமி திகைத்துப் போய் உடனே தோண்டுவதை நிறுத்தினார். வெகுநேரத்துக்குப் பிறகுதான் அவருக்கு மயக்கம் தெளிந்தது! மகான், சாம்பமூர்த்தி சாஸ்திரியிடம் மெதுவாக விசாரித்தார்.

“உடலில் காவி... கையில் தண்டம், கழுத்தில் ருத்திராட்ச மாலை... நெற்றி நிறைய விபூதி... இத்துடன் ஆகாயத்தைத் தொடுமளவு ஒரு துறவியின் உருவம் என் கண் முன் தோன்றியது. அவருக்கு முன்னால், ஆயிரக்கணக்கான அந்தணர்கள் வேதபாராயணம் செய்வதைக் கண்டேன். ஒருகட்டத்தில் அவர் மெல்லிய குரலில் ‘தோண்டாதே... தோண்டாதே’ என்று கூறியது என் செவிகளில் விழுந்தது. அதையே நானும் சொல்லியிருப்பேன் போலிருக்கிறது. பின்னர் அந்த நெடிய உருவம் சிறிதாகி மறைந்துபோனது! ‘சதாசிவம், சதாசிவம்’ என்று யாரோ ஜெபித்துக் கொண்டிருப் பதைக் கேட்டேன்!” என்றார்.

அதே இடத்தில்தான் ஸ்ரீஆத்மபோதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அதிஷ்டானம் இருப்பதை உறுதிசெய்துகொண்ட மகாபெரியவா, 1927-ஆம் வருடம் ஜனவரி மாதம் 17-ஆம் தேதி அதிஷ்டானத்துக்கு பிருந்தாவனம் கட்டி, சிவலிங்க பிரதிஷ்டை செய்தார். இப்போது அங்கே வருடா வருடம் ஆராதனை நடக்கிறது.

சேலத்தில் இருக்கிறது மகா பெரியவா கிரஹம் (இல்லம்). இந்த கிரஹத்தின் மாடியில் வசித்து வருகிறார் ராஜகோபால் என்பவர். கும்பகோணம் அருகில் இருக்கும் கோவிந்தபுரத்தையும் மகாபெரியவாளையும் சம்பந்தப்படுத்தி சுவாரஸ்யமான அனுபவம் ஒன்றைச் சொன்னார் ராஜகோபால்.

ஒரு முறை தம்பதிசமேதராக காஞ்சி மகானின் தரிசனத்துக்குச் சென்றிருந்தார் ராஜகோபால். அப்போது யதேச்சையாக பெரியவா, ராஜகோபா லிடம் கேட்டாராம்: “ஏண்டா, நீ கோவிந்தபுரம் (காஞ்சி மடத்தின் 59-வது பீடாதிபதி ஸ்ரீபோதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் இங்குதான் ஸித்தியடைந்தார்!) போயிருக்கியோ?”

“இன்னும் போகலை” என்றார் ராஜகோபால்.

புன்சிரிப்பு தவழ மகான் சொன்னார்: “ஒரு தடவை அந்த ஊருக்குப் போயிட்டு வா... புரியும்!” ‘அந்த ஊர் எங்கே இருக்கிறது?’ என்றெல்லாம் கேட்காமல் நிறுத்திக்கொண்டார் அந்த பக்தர்.

இது நடந்த சில வருடங்களுக்குப் பிறகுதான் சேலத்தில் ‘பெரியவா கிரஹம்’ ஸ்தாபிதமானது. காஞ்சி சங்கரமடத்தில் வருடாவருடம் மகா பெரியவா ஜெயந்தி (வைகாசி மாதம் அனுஷ நட்சத்திரம்) விமரிசையாக நடக்கும். அதேபோல் சேலம் பெரியவா கிரஹத்திலும் அதே தினம் பெரியவா ஜெயந்தி விழா நடக்கும். அன்றைய தினத்தில், சுமங்கலிகளுக்குப் புடவை தானம் அளிப்பது வழக்கம். இந்தப் புடவைகள் தஞ்சை மாவட்டம் குத்தாலத்தில் குறிப்பிட்ட ஒரு குடும்பத்தாரால் தயார் செய்யப்படுபவை.

அந்த வருடம், ராஜகோபாலின் மனைவி வழி உறவினரான ஒரு டாக்டர் (அமெரிக்காவில் இருக்கிறார்), சேலைகளை வாங்கிக் கொடுக்கும் செலவை, தான் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லி இருந்தார். எனவே, ராஜகோபால் தன் மனைவியுடன் குத்தாலம் சென்று புடவைகளை ஆர்டர் கொடுத்த பின், மெயின் ரோடு வந்தார். சேலம் திரும்புவதற்கு எந்தப் பக்கம் பயணம் செய்வது என்கிற குழப்பத்துடன் கணவனும் மனைவியும் பிற்பகல் நேரத்தில் பஸ் ஸ்டாப்பில் விழித்தனர். வயிற்றுப் பசி வேறு ஒரு பக்கம் அவர்களை அழுத்தியது. அப்போது, ஒரு கார் வேகமாக வந்து அவர்கள் முன் பிரேக் போட்டு நின்றது.

டிரைவர் அவர்களிடம் கேட்கிறார்: “ஏன் சார், நீங்க கோவிந்தபுரம் போகணுமா?”

‘சட்’ டென்று உறைத்தது ராஜகோபாலுக்கு. என்றோ ஒரு நாள் மகாபெரியவா இவரிடம் கேட்ட கேள்வியல்லவா இது? டிரைவரை மேலும் கீழும் பார்த்துவிட்டு, “ஆமாம்” என்றார், ஒருவித பிரமிப்புடன்.

“வண்டியில் ஏறுங்கள். கொண்டுபோய் விடுகிறேன்” என்றார் டிரைவர்.

இருவரும் வண்டியில் ஏறினர். சிறிது நேரப் பயணத்துக்குப் பிறகு கார், கோவிந்தபுரம் சாலையில் போய் நின்றது. “இங்கேருந்து கொஞ்ச தூரம் நடந்தா கோயில் வரும்! தரிசனம் பண்ணிட்டுக் கிளம்புங்க” என்று சொன்ன அந்த டிரைவர், ராஜகோபால் கொடுத்த வாடகைப் பணத்தையும் வாங்கிக் கொள்ளாமல் புறப்பட்டுப் போய்விட்டார்.

கோவிந்தபுரத்தை அடைந்த தம்பதி கோயிலுக்குள் நுழையும் முன்னரே ஓர் அந்தணர் அவர்களைப் பார்த்து, “வாருங்கள்... வாருங்கள். உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறோம். முதலில் சாப்பாடு. பிறகுதான் எல்லாம்!” என்று இருவரையும் கையைப் பிடித்து இழுக்காத குறையாக அவர் அழைத்துச் சென்ற இடம்–போஜன சாலை! இரண்டே இலைகளைத் தவிர, எஞ்சியிருந்த இலைகள் முன்னால் அடியவர்கள் சாப்பிடுவதற்காக அமர்ந்திருந்தனர்.

சாப்பிட்டு முடிந்த பின், கோயிலையும் அதிஷ்டா னத்தையும் பார்த்துவிட்டுத்தான் தம்பதி சேலம் திரும்பினர்.

கார் சவாரி, சாப்பாடு, உபசரிப்பு எல்லாமே பெரியவா ஏற்பாடுதானோ? தன் பக்தர்களுக்கு எந்தக் குறையையும் அந்த மகான் வைத்ததே இல்லை!

அந்த ஆடிட்டர் சேலத்துக்காரர். வசதி படைத்தவர். அவருக்கு காஞ்சி மகானிடம் அளவு கடந்த பக்தி. எந்த ஒரு நல்ல காரியத்தையும் மகானை முன்னிறுத்தியே செய்வார்.



வருடாவருடம் தவறாமல் திருப்பதி செல்வார் அவர். திருப்பதி உண்டியலில் செலுத்துவதற்காக நிறைய பணம் சேமித்து, எடுத்துச் செல்வார். அதை அப்படியே உண்டியலில் செலுத்திவிடுவதும் வழக்கம். ஒரு முறை திருப்பதி போகும்போது ' அப்படியே காஞ்சிபுரம் சென்று மகானையும் தரிசித்துச் செல்லலாம்' என்று அவர் தீர்மானித்தார்.

அவர் தன் குடும்பத்துடன் போய் காஞ்சி மகான் முன் பவ்யமாக நின்றதும், அந்தக் கருணாமூர்த்தி கேட்ட முதல் கேள்வி – "எங்கே, திருப்பதிக்குப் புறப்பட்டுட்டியா?"

அவர் இப்படிக் கேட்டதும் ஆடிட்டர் ஆடிவிட்டார். பிரமிப்பும் திகைப்பும் ஒன்றாக அவரை ஆக்கிரமித்தன. மகானுக்கு பக்தனின் எண்ணம் தெரியாதா, என்ன?

"ஆமாம்" என்னும் வார்த்தையைத் தவிர ஆடிட்டரின் வாய் வேறு எதையும் உச்சரிக்கவில்லை.

"நிறையப் பணத்தை உண்டியலில் போடப் போகிறாயோ?" என்று பெரியவா வார்த்தைகளும் சைகையும் கலந்து கேட்டார்.

அதற்கும் "ஆமாம்" என்றார் ஆடிட்டர்.

ஒரு சில விநாடிகள் மௌனமாக இருந்த மகான், "திருப்பதிக்காரர் ஏற்கெனவே பெரும் பணக்காரர். நீ கொடுத்துதான் ஆகணும்கிறது இல்லை. இன்னும் சொல்லப்போனால் அவருக்குக் கொடுக்க நிறையப் பேர் இருக்கா. நீ ஒண்ணு செய்.. பக்கத்திலே வேடந்தாங்கல் இருக்கு. அதுக்குப் பக்கத்திலேயே வையூர்னு ஒரு சிறு கிராமம். அங்கே ஒரு பெருமாள் கோயில் இருக்கு. அந்தக் கோயில்ல தினமும் எண்ணெய் தீபம்கூட ஏற்ற முடியாம இருக்கு... நீ உண்டியல்ல போடறதுக்காக எடுத்துண்டு போற பணத்தை இந்தக் கோயிலுக்குச் சேர்த்துடு" என்றார்.

'திருப்பதி போகும் வழியில்தான் ஏன் இங்கு வரவேண்டும்? பெரியவா உண்டியல் பணத்தை ஏன் வேறு கோயிலுக்குத் திருப்பிவிட வேண்டும்? எல்லா இயக்கங் களுக்கும் தானே காரணம் என்பதை இந்த மகான் வலியுறுத்திச் சொல்கிறாரோ?'

பெரியவாளின் விண்ணப்பத்துக்குக் கட்டுப்பட்ட ஆடிட்டர், வேடந்தாங்கல் நோக்கிப் பயணமானார். அந்த வையூர் பெருமாள் கோயில் இருந்த நிலையைப் பார்த்துக் கண்கலங்கினார். மகா பெரியவா கட்டளைப்படி, தான் கொண்டுவந்த பணத்தைக் கோயிலுக்குக் கொடுத்து, செலவு செய்ய வைத்தார்.

அன்று முதல் அந்தப் பெருமாள் கோயில் புதுப் பொலிவு பெற்றது. மக்களும் தங்கள் பங்குக்கு உதவிசெய்து சிறப்பித்தார்கள். திருவையாவூர் என்று இப்போது அழைக்கப்படுகிறது அந்த ஊர்.

இது ரொம்பப் பழைய கதை... முசிறியில் ஏழ்மையான ஒரு பிராமணக் குடும்பம். குடும்பத் தலைவருக்கு அங்கே உள்ள சிவன் கோயிலில் அர்ச்சகர் வேலை. சொற்ப வருமானம். அவர் மனைவிக்கோ ஈஸ்வரன் மீது இருந்த பக்தியைவிட காஞ்சி முனிவர் மீது பக்தி அதிகம். சதா சர்வகாலமும் மகா பெரியவாளை மனதால் ஜெபித்துக்கொண்டே இருப்பார். இந்தத் தம்பதிக்கு

வயதுவந்த ஒரே பெண். அவளுக்கு இவர்களால் எப்படித் திருமணம் செய்துவைக்க முடியும்? ‘கோயில் காணிக்கையைக் கொண்டு குடும்பம் நடத்துவதே சிரமமாக இருக்கிறது… இந்நிலையில் மகளின் திருமணத்தை எப்படியாவது நடத்த வேண்டுமே’ என்று புதுக் கவலை ஒன்றுக்குப் புத்துயிர் கொடுத்தார் அந்த வீட்டுத் தலைவி.

விரைவிலேயே பெண்ணுக்கும் ஒரு வரன் குதிர்ந்தது. அந்த அளவுக்குப் பெண் பாக்கியசாலி.

அப்போது காஞ்சியில் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி நடந்தது. மகானைத் தினமும் தரிசித்த பிறகே தன் தொழிலைத் தொடங்கும் விசைத்தறி அன்பர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பல விசைத்தறிகள் இருந்தன. எல்லாமே பட்டுப்புடவை தயார்செய்யும் தறிகள்.

இந்த அதிபர் தரிசனத்துக்கு வந்தபோது அவரை அருகே அழைத்த பெரியவா, “எனக்காக நீ ஒரு காரியம் செய்யணுமே!” என்றார்.

“சொல்லுங்கள்… காத்திருக்கிறேன்.”

மகான் நிதானமாகச் சொன்னார்: “முசிறியில் ஒரு ஈஸ்வரன் கோயில் இருக் கிறது. அங்குள்ள அர்ச்சகர் பரம ஏழை! அவர் பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது. நீ அங்கு போய்த் தங்கி, அந்தப் பெண்ணின் திருமணத்தை நல்லபடியாக முடித்துக் கொடுத்துவிட்டு வா!”

“அப்படிவே செய்கிறேன்!” என்று மகானை வணங்கி விடை பெற்றுக் கொண்டார்.

திருச்சியில் உள்ள தன் பிரதிநிதிகளை அனுப்பி விசாரிக்கச் சொன்னபோது, அந்தப் பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமாகியிருக்கும் விஷயம் தெரியவந்தது. இதையடுத்து அந்தப் பிரதிநிதிகள் நேராக குருக்கள் வீட்டுக் குப் போய், “நாங்கள் காஞ்சிமகான் உத்தரவுப்படி வந்திருக்கிறோம். உங்கள் மகளின் திருமணத்தை நல்ல விதமாக நடத்தித் தரச்சொல்லி மகான் உத்தரவிட்டிருக்கிறார்” என்று சுருக்கமாகச் சொன்னவர்கள் ‘மடமட’வென காரியங்களைக் கவனித்தனர். ஊரார் வியக்கும்படி அந்தத் திருமணம் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், பெரியவா பக்தையான குருக்களின் மனைவி, தன் வாழ்நாளில் ஒரு தடவைகூட பெரியவாளை நேரில் பார்த்தது கிடையாது!



**த**ன்மீதுள்ள ஈடுபாட்டினால் சேவை செய்யும் அன்பர்களை எத்தனை வருடங்களானாலும் காஞ்சி மகான் மறப்பதே இல்லை. எதிரில் வரும்போதே அவர்களின் பெயரை அழைத்து வியப்பில் ஆழ்த்துவார்.

ஒருமுறை வேப்பத்தூரில் மகான் முகாமிட்டிருந்தபோது நடந்த சம்பவம் இது.

வழக்கத்துக்கு மாறாக, நடுப்பகலைத் தாண்டிய பின்பும் மகான் நீராடப் போகாமல் மௌனமாக பாழடைந்த ஒரு மண்டபத்தில் அமர்ந்திருந்தார் ஒருநாள். மடத்தின் மானேஜராக இருந்த லட்சுமண ஐயரும் உடனிருந்த சம்ஸ்கிருதப் பேராசிரியர் பாலசுப்ரமணிய ஐயரும் குழம்பினர்.

இந்த இருவரும் அருகில் வந்து அமைதியாக நின்றதும் மகான் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்: “பல வருஷத்துக்கு முன்னே நமது கல்கத்தா முகாமின்போது, தினமும் வில்வம் கொண்டுவந்து தந்தாரே... நான்கூட அவருக்கு விபூதி, குங்குமம் எல்லாம் கொடுத்து அனுப்பினேனே... அப்போதே அவரது விலாசத்தைக் குறிச்சு வெச்சுக்கச் சொன்னேன்! ஞாபகமிருக்கா? அந்த விலாசத்தைத் தேடி எடுத்து, முந்நூற்றைம்பது ரூபாயை தந்தி மணியார்டராக உடனே அனுப்பி வைங்கோ!” என்று உத்தரவிட்டார் மகான்.

“மணியார்டர் அனுப்பியாகிவிட்டது!” என்ற பிறகுதான் மகாப்ரபு குளிக்கச் சென்றார். திடீரென கல்கத்தாவுக்கு ஏன் மணியார்டர் அனுப்பச் சொன்னார் என்பதற்கான காரணம் பிறகு தெரிய வந்தது. ‘மகாபெரியவாளுக்கு வில்வம் கொடுத்த அந்த அன்பரின் காலம் முடிந்துவிட்டது. அவரது அந்திமக் கிரியைகளுக்குக்கூடப் பணமில்லா மல் அவர் பையன் கல்கத்தாவில் தவிக்கிறான்’ என்பதைச் சர்வவல்லமை வாய்ந்த மகானே அடுத்த சில நிமிடங்களில் இந்த இருவரிடமும் சொன்னார்.

‘கல்கத்தாவில் நடப்பது மகானுக்கு எப்படித் தெரியும்?’ என்று இவர்கள் குழம்ப... அடுத்து வந்து சேர்ந்த தந்தி அந்தத் தகவலை ஊர்ஜிதப்படுத்தியது. தனது தீர்க்கதரிசனத்தால், எங்கோ வெகுதூரத்தில் நடந்த சம்பவத்தை உணர்ந்ததுடன், ‘இப்படி நடக்கும்... விலாசத்தை வாங்கி வையுங்கள்’ என்று அப்போதே சொன்னார் மகான்!

உபன்யாசம் செய்யும் முக்கூர் சீனிவாச வரதாச்சார்யார், பெரியவாளி டம் அளவற்ற பக்தி கொண்டவர். உபன்யாசத்தை ஆரம்பிக்கும் முன், சில நிமிடம் மகானைப் பற்றியும் அவரது பெருமைகளைப் பற்றியும் தவறாமல் குறிப்பிடுவது அவர் வழக்கம்.

வடநாட்டு சேட்ஜி ஒருவர் முக்கூராரின் உபன்யாசத் தைக் கேட்க தினமும் வருவார். அந்த சேட்ஜிக்குத் தீராத நோய் ஒன்று இருந்தது. அவரால் வாய் வழியாக ஆகாரம் உண்ணமுடியாது. வயிற்றில் துவாரமிட்டு, குழாய் வழியாக உணவைச் செலுத்தி வந்தார்கள். ஆலய தரிசனம், மந்திர–தந்திரங்கள் என அவர் மேற் கொண்ட எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை.

பெரியவாளைப் பற்றி முக்கூரார் தினமும் சொல்வதைக் கேட்ட சேட்ஜி, மகானை தரிசிக்க விரும்பினார். ‘அவராலாவது என் குறை நிவர்த்தி ஆகட்டுமே!’ என்று நினைத்து விஷயத்தை

முக்கூராரிடம் சொன்னார். 'மகானின் அனுமதி பெற்று உங்களை அவரிடம் அழைத்துச் செல்கிறேன்' என்றார் முக்கூரார்.

மகானிடம் முக்கூரார் சேட்ஜியைப் பற்றிச் சொல்ல, "இப்போது வேண்டாம்!" என்று அவர் பதில் சொன்னார். இதை எப்படி சேட்ஜியிடம் சொல்ல முடியும்? ஏதேதோ சாக்குப்போக்குகள் சொல்லிச் சமாளித்தார் முக்கூரார். ஆனால், ஒரு நாள் நோயாளியின் நிர்ப்பந்தம் தாங்கமுடியாமல் முக்கூரார் அவரை மகானின் இருப்பிடத்துக்கே அழைத்து வந்தார். மகானிடமும் விஷயத்தைச் சொன்னார்.

"அவரை பக்தியில் ஈடுபடச் சொல்லு... நல்ல பல காரியங்கள் செய்யட்டும்... கடவுள் காப்பாற்றுவார்!" என்றார் மகான்.

முக்கூரார் விடவில்லை. சேட்ஜி ஏற்கெனவே பக்தர் என்றும் அளவுக்கதிகமாகவே தானதர்மங்கள் செய்வதாகவும் சொன்னார்.

மகான் யோசித்தார். "நான் சொல்றபடி செய்வாரா?"

"செய்யச் சொல்றேன்!"

"நமது பழைய பதினெண் புராணங்களை சம்ஸ்கிருதத்தில் நல்ல முறையில் தனித்தனிப் புத்தகமாக அச்சிட்டு, வேத சாஸ்திர விற்பன்னர் களுக்கு இலவசமாகத் தருவாரா?"

"நிச்சயமாகத் தருவார்!"

அதன் பிறகு சேட்ஜிக்கு ஆசி வழங்கி இருவரையும் அனுப்பிவைத்தார்.

சேட்ஜி ஊருக்குத் திரும்பி வந்ததும் முழுமூச்சுடன் புத்தகங்களை வரிசையாக அச்சிட்டு, பல மாநிலங்களில் இருந்த பண்டிதர் களுக்கும் இலவசமாகக் கொடுத்தார்.

பதினேழு புராணங்களை அச்சிட்டு வெளி யான நிலையிலும் சேட்ஜியின் உடல்நிலையில் எந்த மாற்றமும் இல்லை. இருந்தாலும், தான் எடுத்த காரியத்தை சேட்ஜி நிறுத்தவே இல்லை!

பதினெட்டாவது புத்தகமான ஸ்கந்த புராணத்தை அச்சிட ஆரம்பித்தபோது மகானின் கருணைப் பார்வை சேட்ஜியின்மீது விழுந்தது. என்ன விந்தை! விரைவிலேயே வாய்வழியாக மெதுவாக உணவு உண்ண ஆரம்பித்தார் சேட்ஜி. அவருடைய குடும்பத்தினருக்கு அளவில்லாத மகிழ்ச்சி!

"மகாபெரியவாளின் அனுக்கிரகம்தான் சேட்ஜியைக் காப்பாற்றியது!" என்று முக்கூரார், மகானின் முன் கண்ணீர் பெருக நின்றார்.

அதற்கு மகான் சொன்ன வார்த்தைகள் என்ன தெரியுமா?

"நமது நாட்டின் தர்மசாஸ்திரங்களின் சக்தி அல்லவா அவரைக் காப்பாற்றியிருக்கிறது!"



தன்மீதுள்ள ஈடுபாட்டினால் சேவை செய்யும் அன்பர்களை எத்தனை வருடங்களானாலும் காஞ்சி மகான் மறப்பதே இல்லை. எதிரில் வரும்போதே அவர்களின் பெயரை அழைத்து வியப்பில் ஆழ்த்துவார்.

ஒருமுறை வேப்பத்தூரில் மகான் முகாமிட்டிருந்தபோது நடந்த சம்பவம் இது.

வழக்கத்துக்கு மாறாக, நடுப்பகலைத் தாண்டிய பின்பும் மகான் நீராடப் போகாமல் மௌனமாக பாழடைந்த ஒரு மண்டபத்தில் அமர்ந்திருந்தார் ஒருநாள். மடத்தின் மானேஜராக இருந்த லட்சுமண ஐயரும் உடனிருந்த சம்ஸ்கிருதப் பேராசிரியர் பாலசுப்ரமணிய ஐயரும் குழம்பினர்.

இந்த இருவரும் அருகில் வந்து அமைதியாக நின்றதும் மகான் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்: "பல வருஷத்துக்கு முன்னே நமது கல்கத்தா முகாமின்போது, தினமும் வில்வம் கொண்டுவந்து தந்தாரே... நான்கூட அவருக்கு விபூதி, குங்குமம் எல்லாம் கொடுத்து அனுப்பினேனே... அப்போதே அவரது விலாசத்தைக் குறிச்சு வெச்சுக்கச் சொன்னேன்! ஞாபகமிருக்கா? அந்த விலாசத்தைத் தேடி எடுத்து, முந்நூற்றைம்பது ரூபாயை தந்தி மணியார்டராக உடனே அனுப்பி வைங்கோ!" என்று உத்தரவிட்டார் மகான்.

"மணியார்டர் அனுப்பியாகிவிட்டது!" என்ற பிறகுதான் மகாப்ரபு குளிக்கச் சென்றார். திடீரென கல்கத்தாவுக்கு ஏன் மணியார்டர் அனுப்பச் சொன்னார் என்பதற்கான காரணம் பிறகு தெரிய வந்தது. 'மகாபெரியவாளுக்கு வில்வம் கொடுத்த அந்த அன்பரின் காலம் முடிந்துவிட்டது. அவரது அந்திமக் கிரியைகளுக்குக்கூடப் பணமில்லா மல் அவர் பையன் கல்கத்தாவில் தவிக்கிறான்' என்பதைச் சர்வவல்லமை வாய்ந்த மகானே அடுத்த சில நிமிடங்களில் இந்த இருவரிடமும் சொன்னார்.

'கல்கத்தாவில் நடப்பது மகானுக்கு எப்படித் தெரியும்?' என்று இவர்கள் குழம்ப... அடுத்து வந்து சேர்ந்த தந்தி அந்தத் தகவலை ஊர்ஜிதப்படுத்தியது. தனது தீர்க்கதரிசனத்தால், எங்கோ வெகுதூரத்தில் நடந்த சம்பவத்தை உணர்ந்ததுடன், 'இப்படி நடக்கும்... விலாசத்தை வாங்கி வையுங்கள்' என்று அப்போதே சொன்னார் மகான்!

உபன்யாசம் செய்யும் முக்கூர் சீனிவாச வரதாச்சார்யார், பெரியவாளி டம் அளவற்ற பக்தி கொண்டவர். உபன்யாசத்தை ஆரம்பிக்கும் முன், சில நிமிடம் மகானைப் பற்றியும் அவரது பெருமைகளைப் பற்றியும் தவறாமல் குறிப்பிடுவது அவர் வழக்கம்.

வடநாட்டு சேட்ஜி ஒருவர் முக்கூராரின் உபன்யாசத் தைக் கேட்க தினமும் வருவார். அந்த சேட்ஜிக்குத் தீராத நோய் ஒன்று இருந்தது. அவரால் வாய் வழியாக ஆகாரம் உண்ணமுடியாது. வயிற்றில் துவாரமிட்டு, குழாய் வழியாக உணவைச் செலுத்தி வந்தார்கள். ஆலய தரிசனம், மந்திர—தந்திரங்கள் என அவர் மேற் கொண்ட எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை.

பெரியவாளைப் பற்றி முக்கூரார் தினமும் சொல்வதைக் கேட்ட சேட்ஜி, மகானை தரிசிக்க விரும்பினார். ‘அவராலாவது என் குறை நிவர்த்தி ஆகட்டுமே!’ என்று நினைத்து விஷயத்தை முக்கூராரிடம் சொன்னார். ‘மகானின் அனுமதி பெற்று உங்களை அவரிடம் அழைத்துச் செல்கிறேன்’ என்றார் முக்கூரார்.

மகானிடம் முக்கூரார் சேட்ஜியைப் பற்றிச் சொல்ல, “இப்போது வேண்டாம்!” என்று அவர் பதில் சொன்னார். இதை எப்படி சேட்ஜியிடம் சொல்ல முடியும்? ஏதேதோ சாக்குப்போக்குகள் சொல்லிச் சமாளித்தார் முக்கூரார். ஆனால், ஒரு நாள் நோயாளியின் நிர்ப்பந்தம் தாங்கமுடியாமல் முக்கூரார் அவரை மகானின் இருப்பிடத்துக்கே அழைத்து வந்தார். மகானிடமும் விஷயத்தைச் சொன்னார்.

“அவரை பக்தியில் ஈடுபடச் சொல்லு... நல்ல பல காரியங்கள் செய்யட்டும்... கடவுள் காப்பாற்றுவார்!” என்றார் மகான்.

முக்கூரார் விடவில்லை. சேட்ஜி ஏற்கெனவே பக்தர் என்றும் அளவுக்கதிகமாகவே தானதர்மங்கள் செய்வதாகவும் சொன்னார்.

மகான் யோசித்தார். “நான் சொல்றபடி செய்வாரா?”

“செய்யச் சொல்றேன்!”

“நமது பழைய பதினெண் புராணங்களை சம்ஸ்கிருதத்தில் நல்ல முறையில் தனித்தனிப் புத்தகமாக அச்சிட்டு, வேத சாஸ்திர விற்பன்னர் களுக்கு இலவசமாகத் தருவாரா?”

“நிச்சயமாகத் தருவார்!”

அதன் பிறகு சேட்ஜிக்கு ஆசி வழங்கி இருவரையும் அனுப்பிவைத்தார்.

சேட்ஜி ஊருக்குத் திரும்பி வந்ததும் முழுமூச்சுடன் புத்தகங்களை வரிசையாக அச்சிட்டு, பல மாநிலங்களில் இருந்த பண்டிதர் களுக்கும் இலவசமாகக் கொடுத்தார்.

பதினேழு புராணங்களை அச்சிட்டு வெளி யான நிலையிலும் சேட்ஜியின் உடல்நிலையில் எந்த மாற்றமும் இல்லை. இருந்தாலும், தான் எடுத்த காரியத்தை சேட்ஜி நிறுத்தவே இல்லை!

பதினெட்டாவது புத்தகமான ஸ்கந்த புராணத்தை அச்சிட ஆரம்பித்தபோது மகானின் கருணைப் பார்வை சேட்ஜியின்மீது விழுந்தது. என்ன விந்தை! விரைவிலேயே வாய்வழியாக மெதுவாக உணவு உண்ண ஆரம்பித்தார் சேட்ஜி. அவருடைய குடும்பத்தினருக்கு அளவில்லாத மகிழ்ச்சி!

“மகாபெரியவாளின் அனுக்கிரகம்தான் சேட்ஜியைக் காப்பாற்றியது!” என்று முக்கூரார், மகானின் முன் கண்ணீர் பெருக நின்றார்.

அதற்கு மகான் சொன்ன வார்த்தைகள் என்ன தெரியுமா?

“நமது நாட்டின் தர்மசாஸ்திரங்களின் சக்தி அல்லவா அவரைக் காப்பாற்றியிருக்கிறது!”

**நா**னும் என் கணவரும் 47 வருடங்களாகத் திருச்சியில் இருந்தோம். நாங்கள் அகிலாண்டேஸ்வரி பக்தர்கள். அடிக்கடி திருவானைக்கா சென்று பிரார்த்தனை செய்வோம். திடீரென்று நோய்வாய்ப்பட்டு, என் கணவர் பத்து வருடங்களுக்கு முன் என்னைவிட்டுப் பிரிந்தார்.



அவர் நோயால் கஷ்டப்படும்போது, அன்னை அகிலாண்டேஸ்வரி படத்தின் முன் நின்று மனமுருக வேண்டுவேன். ‘அகிலம் காக்கும் அன்னையே... என் மாங்கல்யம் காப்பாற்று தாயே!’ என மன்றாடுவேன். கடைசியில் அவர் இறந்த தும், ‘என்னைக் கைவிட்டுவிட்டாயே’ என்று மனம் நொந்துபோனேன்.

அவர் இறந்து சில நாட்கள் வரை பூஜை அறைக்குள் போவதோ விளக்கு ஏற்றிக் கும்பிடுவதோ இல்லை. மனம் வெறுத்துப்போயிருந்தேன். அப்போது ஒரு நாள் டி.வி–யில் காஞ்சி மகாஸ்வாமிகள் அருளுரை சொன்னார்: “விஷமம் செய்ததற்காகத் தன் குழந்தையை நன்றாக அடித்து வாசலில் விரட்டிவிட்டாள் ஒரு தாய். சிறிது நேரம் கழித்து அந்தக் குழந்தை அழுகையை நிறுத்திவிட்டுத் தன் தாயின் காலை வந்து கட்டிக்கொண்டது. அவளும் அதை எடுத்து அணைத்துக் கொண்டு ஆறுதல் சொன்னாள். அதைப் போல் நமக்குத் துன்பம் வரும்போது, அந்த அன்னையின் காலடியே சரணம் என்று மனதை சாந்தப்படுத்திக் கொள்ள வேண்டும்!”

இது எனக்காகச் சொல்லப்பட்டது என்று மனதைத் தேற்றிக்கொண்டு, அன்றிலிருந்து பழையபடி பூஜை செய்யத் தொடங்கினேன். இப்போது நான் சென்னையில் மன ஆறுதலுடன் இருக்கிறேன்.

– வேதாபானு மூர்த்தி, சென்னை–64.

மகா பெரியவாளிடம் கைங்கரியம் செய்யும் பாக்கியம் பெற்றவர் ஏகாம்பரம் என்கிற அன்பர்!



“பேப்பர்- பேனா எடுத்துவந்து, நான் சொல்வதை எழுதிக்கொள்” என்று மகாகாவ் என்னும் இடத்தில் (குல்பர்கா அருகில்) முகாமிட்டிருந்தபோது மகான், ஏகாம்பரத்திடம் சொன்ன விஷயம் இது.

மகா பெரியவா தன் பதின்மூன்றாவது வயதில் பட்டத்துக்கு வந்த புதிதில், அவருக்கு முன் காஞ்சி காமகோடி பீடாதிபதியாக இருந்த பரமாச்சார்யாரிடம் கைங்கரியம் செய்தவர்களை வரிசையாக அறிமுகப்படுத்தி னார்களாம். அந்த வரிசையில் ஒருவரைக் காண்பித்து, “இவர்தான் முந்தைய குருவுக்கு மடிவஸ்திரம் தோய்த்துக் கொடுத்தவர்” என்று பெரியவாளிடம் சொல்லிவிட்டு, அவர் பக்கம் திரும்பி, “இனிமேல் இவர்தான் நமக்குப் பெரியவா... உன்னோட வஸ்திர கைங்கரியத்தை தொடர்ந்து பண்ணு!” என்று சொன்னார். ஆனால், அந்த அன்பரிடமிருந்து பதில் வேறுவிதமாக வந்தது. “நான் முந்தைய பெரியவாளுக்குக் கைங்கரியம் செய்த கைகளால் வேறு எவருக்கும் செய்ய இயலாது” என்றார்.

இது தவிர, இன்னொன்றையும் மகான் எழுதிக்கொள்ளச் சொன்னார். கலவையில் மகானின் முகாம்... பண்ருட்டியில் இருந்து ரெட்டியார் ஒருவர் மடத்துக்கு நிறையக் காணிக்கை அனுப்பியிருந்தார். அத்துடன் தன் வணக்கத்தையும் பெரியவாளுக்குச் சொல்லச் சொல்லி இருந்தார்.

“அவர் ஏன் நேரில் வரவில்லை?” – மகான் கேட்டார்.

அதற்கு காணிக்கை கொண்டுவந்தவர் சொன்ன பதில்: “66-வது பீடாதிபதியான குருவை தரிசனம் செய்த கண்களால், அவருக்குப் பின்னர் வரும் குருவைத் தரிசிக்க மனம் ஒப்பவில்லை என்று ரெட்டியார் சொல்வார்.”

இந்த இருவரின் குருபக்தியையும் மெச்சி, இது எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்றுதான் ஏகாம்பரத்திடம், சொல்லி எழுதவைத்தார். “இதை இப்படியே ரேடியோவில் சொல் லும்படி ஏற்பாடுசெய்!” என்று பெரியவா சொன்னார்.

ஆனால், குல்பர்காவில் இருந்துகொண்டு எதையோ சொல்லி, அது ரேடியோவில் வரவேண்டுமென்றால் எப்படி? எவ்வளவோ தடைகளைத் தாண்டியல்லவா இவற்றை ஒலிபரப்ப இயலும்? ஏகாம்பரம், “அது முடியாத காரியம்!” என்று பெரியவாளுக்கு நிலைமையை விளக்கினார்!

“சரி, அதனால் என்ன... பத்திரிகைகளிலாவது வரட்டுமே! அதற்கான ஏற்பாட்டைச் செய்யேன்” என்றார்.

“சரி!” என்ற ஏகாம்பரம் ஓய்வெடுக்கப் போய்விட்டார். சற்று நேரத்துக்குள் ஏகாம்பரத்துக்கு அழைப்பு வந்தது. மகா பெரியவாளைப் பார்க்க ஒரு குழு வந்திருந்தது. அவர்களுக்காகத்தான் ஏகாம்பரத்தை வரவழைத்திருந்தார் மகா பெரியவர். “நான் காலையில் சொன்ன குருபக்தியை ஒலிபரப்ப முடியுமானு இவாளிடம் கேட்டுப் பாரேன்!”

குழுவில் இருப்பவர்கள் யாரென்று தெரிந்த ஏகாம்பரம் வியப்பினால் ஸ்தம்பித்துப் போய்விட்டார். அவர்கள் அனைவரும் அகில இந்திய வானொலியின் ஸ்டேஷன் டைரக்டர்கள். ஒரு டிரெயினிங்குக்காக வந்தவர்கள். மகான் இங்கு இருப்பதால் தரிசிக்க வந்திருக்கிறார்கள்.

மகானின் எண்ணப்படி, குருபக்தியில் சிறந்த இருவரைப் பற்றியும் எடுத்துச் சொல்லி, “இதை ஒலிபரப்ப முடியுமா?” என்று அவர்களிடம் கேட்டார் ஏகாம்பரம்.

“இது எங்களுக்குக் கிடைத்த பெரும்பேறு… உடனே அதற்கான ஏற்பாடு செய்கிறோம்… இப்படி ஒரு நல்ல காரி யத்துக்கு எங்களை உபயோகப்படுத்த மகான் நினைத்தது பெரும் பாக்கியம்!” என்று சொன்னவர்கள், அன்றே அதை ஒலிபரப்பவும் செய்தனர். பிரம்ம ஞானிகள் நினைத்தது நடக்கும் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையா?

கொளுத்துகிற வெயிலில் அடியார்கள் புடைசூழ ஒருமுறை மகான், மடத்துக்கு வேகமாக வந்து கொண்டிருந்தார். விறுவிறுவென வந்தவர் ஓர் இடத்தில் ‘சட்’டென்று நின்றுவிட்டார். ஏன் என்று ஒருவருக்கும் காரணம் தெரியவில்லை.

வெயில் அதிகமாக இருந்ததால் தரையின் வெப்பம் அதிகமாக இருந்தது. அவரைச் சுற்றி நின்ற அடியவர்கள் பாதங்களை அப்படியும் இப்படியுமாக அசைத்தார்கள்.

பெரியவா ஆசீர்வதிக்க அக்கம்பக்கத்தில் வீடுகூட எதுவும் இல்லை.

பெரியவாளின் பின்னால் வந்துகொண்டிருந்த அவரின் காரியஸ்தர், சூழ்நிலையை ஒருவாறு புரிந்துகொண்டார். மகான் அடுத்த அடி எடுத்து வைக்க முடியாமல் இருப்பது எதனால் என்று தெரிந்து கொண்டார். உடனே முன்னால் வந்தவர் குனிந்து காம்புடன் கீழே விழுந்து கிடந்த வில்வ இலைகளைக் கையில் எடுத்தார்.

மகா பெரியவரின் அடுத்த அடி வில்வ இலைகள் மீதுதான் இருந்திருக்கும். எனவே, அவர் சட்டென்று நின்றுவிட்டார். சர்வேஸ்வரனின் திருமுடியை அலங்கரிக்கும் எங்கோ கிடந்த வில்வ இலை, சுட்டெரிக்கும் வெயிலில் இவர் கண்களுக்கு மட்டும் எப்படித் தெரிந்தது..? அதுதான் அற்புத சக்தி!

## ஆரஞ்சு விரட்டிய ஜுரம்!

**ஒ**ரு முறை காஞ்சிபுரம் சென்றிருந்தோம். என்னுடன் 7 வயது பேத்தி விஜிஷா வந்திருந்தாள். அது மார்கழி மாதம். இரண்டு நாள் தங்கி தனுர்மாத பூஜை பார்த்துவிட்டு வருவது எங்கள் திட்டம்.

மாலை நான்கு மணியளவில் காஞ்சி போய்ச் சேர்ந்தோம். ‘காக்கவாக்கசத்திரம்’ என்ற இடத்தில் சாமான்களை வைத்துவிட்டு ஸ்ரீமடம் சென்றோம். என் பேத்திக்கு லேசாக உடம்பு சுட ஆரம்பித்து, விரைவிலேயே கடுமையான காய்ச்சல் கண்டது. கண்களை மூடியபடி குழந்தை துவண்டு கிடந்தது. எனவே மடத்தில் இருக்க முடியாததால் உடனே சத்திரத்துக்குத் திரும்பிவிட்டோம்.

இரவு முழுவதும் ஜுரம் குறையவில்லை. ஒரு ஸ்பூன் தண்ணிகூட குடிக்கவில்லை. பொழுது விடிந்ததும் ஏதாவது டாக்டரிடம் போகலாம் என்று நினைத்தோம். அதற்குமுன் ஸ்ரீமடம் சென்று பெரியவாளைத் தரிசிக்கலாம் என்று சென்றோம். குழந்தை என் தோளிலேயே படுத்திருந்தது. மகா பெரியவர் தரிசனம்தந்துகொண்டிருந்தார். மடியில் பேத்தியைப் படுக்க வைத்து, அங்கே ஓர் ஓரமாக உட்கார்ந்து இருந்தேன்.

அப்போது பெரியவா, வேதபுரி சாஸ்திரிகள் என்பவரை அழைத்து அவர் கையில் ஒரு சிறிய ஆரஞ்சுப் பழத்தைக் கொடுத்து, “இதை அந்த ஜுரக்காரக் குழந்தைக்குக் கொடு!” என்றார். நான் அதை வாங்கி, உரிக்காமல் அப்படியே குழந்தையிடம் கொடுத்தேன். அதைக் கையில் வைத்துக் கொண்டே நன்றாகத் தூங்கிவிட்டாள் பேத்தி.

பத்தே நிமிடத்தில் விழித்துக் கொண்டாள். “பாட்டி பசிக்குது!” என்றாள் இயல்பான குரலில். வியர்த்து வியர்த்து பேத்தியின் ஜுரம் முழுவதுமாக இறங்கிவிட்டது. பெரியவா கொடுத்த பழத்தை பேத்திக்குக் கொடுத்தேன். சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்ட பின் கலகலப்பானாள். அந்த மகானுடைய அனுக்கிரகத்தை எப்படிச் சொல்வது?! ஆஹா!

– **ராதாராம்,** சென்னை–15.